

# தமிழரசு





**1916 பிப்ரவரி 8**
ஜவஹர்லால் நேரு — கமலாகவுல் திருமணம்.

**1917 நவம்பர் 19**
இந்திரபிரியதரிசினி பிறப்பு.

**1923 டிசம்பர்:**
இந்திரா மாடர்ன் பள்ளியில் சேர்ந்தார்.

**1930 ஏப்ரல் 6**
இந்திரா அலகாபாத்தில் வானரசேனை என்ற அமைப்பை ஏற்படுத்தினார்.

**1932 பிப்ரவரி**
புத்தகங்களை விரும்பிப் படிப்பதுபோல இந்திரா விளையாட்டுகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கினார். மலை யேறுதல் முதல் இந்திய நடனம் வரை அனைத்தையும் கற்றார்.

**1932 செப்டம்பர் 18**
காந்தியடிகளை அவர் இருந்த சிறைக்குச் சென்று சந்தித்தார் இந்திரா.

**1942 மார்ச் 26**
இந்திரா—பெரோஸ் காந்தி திருமணம்,

## திறமையான நிர்வாகி

"இந்திரா காந்தி திறமையாக நிர்வாகம் செய்து வருகிறார். மாநிலங்களுக்கு இருக்கும் தடைகளை அவர் உணராமல் இல்லை"

—பேரறிஞர் அண்ணா

மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் முதலாவது நினைவு நாளையொட்டி (31.10.85) அவரது திருவுருவப்படம் 'தமிழரசு' முகப்பில் இடம் பெற்றுள்ளது.

# அன்னை இந்திராகாந்தியின் வாழ்க்கை ஏட்டில் சில நிகழ்ச்சிகள்

**1944 ஆகஸ்ட் 20**
திருமதி இந்திராவின் முதல் ஆண் குழந்தை ராஜீவ் பிறப்பு.

**1946 டிசம்பர் 14**
திருமதி இந்திராவின் இரண்டாவது ஆண் குழந்தை சஞ்சை பிறப்பு.

**1964 மே 27**
பிரதமர் ஜவகர்லால் நேரு மறைவு.

**1964 ஜூன்**
மைய அரசில் செய்தி-ஒலிபரப்புத் துறையில் அமைச்சராகத் திருமதி இந்திரா காந்தி பதவி ஏற்றார்.

**1966 ஜனவரி 24**
இந்தியப் பிரதமராக திருமதி இந்திரா காந்தி பதவி ஏற்றார். (முதன் முறையாக)


தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2016
குரோதன – ஐப்பசி 16
மலர் : 16. 1-11-1985. இதழ் : 9


**1967 மார்ச் 13**
திருமதி இந்திரா காந்தி பிரதமராகப் பதவி ஏற்றார்

**1969 ஜூலை 19**
14 பெரிய வங்கிகளை நாட்டுடைமை யாக்கினார் திருமதி இந்திராகாந்தி.

**1971 மார்ச் 18**
திருமதி இந்திரா பிரதமராகப் பதவி ஏற்றார்.

**1977 மார்ச் 21**
பிரதமர் பதவியை திருமதி இந்திரா காந்தி ராஜினாமா செய்தார்.

**1980 ஜனவரி 15**
திருமதி இந்திரா காந்தி பிரதமரானார்.

**1980 ஜூன் 23**
திரு சஞ்சய் காந்தி, எம்.பி. விமான விபத்தில் இறந்தார்.

**1983 மார்ச்**
அணி சேரா இயக்கத்தின் தலைவராகத் திருமதி இந்திரா காந்தி டில்லி கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1984 அக்டோபர் 31**
இந்திரா காந்தி மறைவு

# அமரர் இந்திரா காந்திக்கு நினைவு அஞ்சலி

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் திருமகளாகப் பிறந்து, இந்திய நாட்டின் பிரதமராக விளங்கிய திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு வரலாற்றில் தனி இடம்—சிறப்பிடம் உண்டு.

அனைத்து நாடுகளிலும் புகழ்வாய்ந்த பெண்மணியாக அவர் திகழ்ந்தார்.

நாட்டுக்குத் தேவையான பல நல்ல பணிகளை முனைப்புடன் நிறைவேற்றினார்.

வங்கிகளை நாட்டுடைமையாக்கிய நிகழ்ச்சி எவரும் எளிதில் எண்ணிப் பார்க்க முடியாத ஒன்று.

பெண்ணாகப் பிறந்தாலும், ஆடவர்களிடம் காணப்படும் வீரத்தன்மை அவரிடம் காணப்பட்டது.

'பெண் குழந்தை பிறந்திருக்கிறது' என்று கவலைப்பட்டாராம் பண்டித நேரு. அப்போது, ''இந்தப் பெண் குழந்தை 100 ஆண்களுக்குச் சமம்'' என்று நேருவின் தந்தை மோதிலால் நேரு தீர்க்கதரிசனமாகச் சொன்னாராம்.

பாட்டனாரின் தீர்க்க தரிசனம் நிறைவேறிவிட்டது என்பதை வரலாறு எடுத்துச் சொல்லிவிட்டது.

அஞ்சா நெஞ்சமும், பிரச்னைகளில் தெளிவும், எந்தத் திட்டத்தையும் துணிந்து நிறைவேற்றும் ஆற்றலும், அயல் நாட்டவர்களையும் கவர்கின்ற சிநேக மனப்பான்மையும் கொண்டுவிளங்கியவர் அன்னை இந்திரா.

பூமிப் பந்தில் இந்திராவின் காலடி படாத நாடே கிடையாது. அவர் எங்கெங்கு சென்றாலும் அங்கெல்லாம் அவரைக் காண்பதற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆர்வத்துடன் அணிதிரண்டு வருவது வாடிக்கை.

அவரை வாழ்த்தாத நெஞ்சம் இல்லை; போற்றாத மனிதர் இல்லை.

இந்திய நாட்டின் வளர்ச்சிக்காக அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். இருபது அம்சத் திட்டம் என்ற இனிய திட்டத்தை உருவாக்கி ஒவ்வொரு துறையிலும் மேன்மையையும் முன்னேற்றத்தையும் உருவாக்கினார். இந்தியத் திருநாட்டின் பெருமையை உலகநாடுகள் உணருமாறு செய்தார். சுருக்கமாகச் சொன்னால் இந்தியாவின் பெருமையை உயர்த்தினார்.

தமிழக மக்களிடம் அன்னை இந்திரா காந்தி அவர்களுக்குத் தனிப்பட்ட நேச மனப்பான்மை உண்டு. தமிழக மக்கள் அவரிடம் அளவற்ற அன்பு செலுத்தி வந்தார்கள். அவர் தமிழகத்துக்கு வரும்போதெல்லாம் ஆடவர்களும் பெண்களும் அலைகடலெனக் காத்திருந்து வரவேற்புத் தந்திருக்கின்றனர்.

தமிழகத்தில் பல திட்டங்களின் கால்கோள் விழாக்களின்போதும், சில நிறுவனங்களின் தொடக்க விழாவின்போதும், 5ஆம்

சென்னைக்கு வருகை புரிந்தபோது முதல்வர் அண்ணா வரவேற்கிறார். (1968)






தஞ்சையில் 16.9.84ல் நடைபெற்ற ராஜராஜசோழன் 1000-மாவது ஆண்டு முடிசூட்டு விழாவில் கலந்துகொண்ட போது....

உலகத்தமிழ் மாநாட்டின்போதும் தஞ்சையில் ராஜராஜசோழன் விழாவின் போதும், கல்பாக்கம் அணுமின் நிலையத் தொடக்கவிழாவின் போதும், வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டபோதும் திருமதி இந்திராகாந்தி அவர்கள் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார்கள். அப்போதேல்லாம் அவரைச் சுற்றிலும் மக்கட் கடல்தான் காட்சி அளித்தது.

ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்த காலத்தில் ஆலைகள், தொழிற்சாலைகள் அதிக அளவில் உருவாவதற்கு வழிவகுத்ததுடன், விஞ்ஞானச் சாதனைகள், ஆய்வுகள் ஆகியவற்றிற்கு அதிக ஊக்கம் அளித்து வந்தார். அதிலும் அணுசக்தித் துறையில் அவர் மிகுந்த நாட்டம் செலுத்தி வந்தார். அவரது அருமை மகளான இந்திரா காந்தி அவர்களும் விஞ்ஞானத்தில் அதிக அக்கறை காட்டினார். அணுசக்தித் துறைக்கு ஊக்கம் கொடுத்தார். அவரது அருந்தொண்டின் ஆக்கம்தான் தமிழகத்தில் உள்ள கல்பாக்கம் அணுமின்நிலையத்தின் தோற்றம் என்றால் அது மிகையாகாது.

கல்பாக்கம் 2-வது அணுமின் நிலையம் புளுட்டோனியம் தோரியம் கலவை மூலப் பொருளைப் பயன்படுத்தி அக்டோபர் 18ஆம் நாளன்று வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது. பொதுவாக அணுமின்நிலையத்தில் விலை உயர்ந்த யுரேனியத்தைத்தான் பயன்படுத்துவார்கள். அதற்கு மாற்றுப் பொருளாக புளுட்டோனியம் - தோரியம் மூலப் பொருளை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்தார்கள்.

இத்தகைய ஆராய்ச்சியில் பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் ஆகிய 6 நாடுகள் மட்டுமே இதுவரை வெற்றி பெற்றிருந்தன. இந்த நாடுகளின் உதவி இல்லாமலேயே தனியாக ஆராய்ச்சி நடத்தி அவர்கள் அடைந்த சாதனையைச் செய்து முடித்துவிட்டார்கள் கல்பாக்கம் விஞ்ஞானிகள். அணுமின்நிலையங்களுக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவதில் புதிய உத்தியைக் கண்டுபிடித்ததன் மூலம் இந்தியா உலக நாடுகளில் 7வது நாடாக இடம் பெற்று விட்டது. வளர்ந்து வரும் நாடுகளில் அணு ஆராய்ச்சியில் வெற்றி பெற்றிருக்கும் நாடு இந்தியா மட்டுமே என்ற பெருமையும் இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது. இதற்கெல்லாம் அடித்தளம் வகுத்தவர் திருமதி இந்திரா காந்தி அவர்கள்தான். அதனால் தான் இந்த 'பாஸ்ட் ப்ரீடர் டெஸ்ட் ரியாக்டர்' என்கிற அணுமின் உலைக்கு இந்திரா காந்தியின் பெயர் சூட்டப்பட உள்ளது.

இந்திரா காந்தி அவர்கள் இறுதியாக 16.10.84ல் தமிழகத் தலைநகரான சென்னைக்கு வந்து சென்றதை எவரும் மறக்க முடியாது.

நமது அன்புக்குரிய முதல்வர் அவர்கள் அப்பாலோ மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த சமயம், அவரைச் சந்திப்பதற்காகத் தனி விமானத்தில் புறப்பட்டு வந்தார் இந்திரா காந்தி அவர்கள்.

முதல்வர் நலம் பெறத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்த அவர், ''நீங்கள் எவ்வளவோ எதிர்ப்புக்களைச் சமாளித்து வெற்றி பெற்றிருக்கிறீர்கள். அதுபோல் இந்த நோயின் பிடியிலிருந்தும் சமாளித்து வெற்றி பெறுவீர்கள்'' என்று ஆறுதல் சொல்லிச் சென்றதை அகிலமே அறியும். அன்னை இந்திராவின் அன்பு இதயம் மனப்பூர்வமாக சொல்லிய வாழ்த்து முழக்கம் வீண்போகவில்லை. மாண்புமிகு முதல்வர் அமெரிக்காவுக்குச் சென்று சிகிச்சை பெற்று, நோயை வென்று, மீண்டும் தேர்தலில் நின்று, வெற்றி பெற்று முதல்வராகிவிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமெரிக்க நாட்டிற்குச் சென்று சிகிச்சைபெறுவதற்குரிய வழிவகைகளை இந்திரா காந்தி அவர்கள் செய்து தந்தார். முதல்வருக்கும் அவருடன் சென்ற முக்கியஸ்தர்களுக்கும் உடனடியாக விசா முதலியவை கிடைப்பதற்கும் ஆவன செய்தார். முதல்வர் பயணம் செய்த விமானத்தை-நடமாடும் மருத்துவமனையாக மாற்றுவதற்கும் அனுமதி அளித்தார்.

அன்னை இந்திராவின் பெயரைச் சின்னஞ்சிறு குழந்தைகளும் அறியும்! வயது முதிர்ந்தவர்களின் நினைவிலும் அவரது பெயர் மின்னும்.



சென்னை அப்பாலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த மாண்புமிகு முதல்வரைப் பார்க்க 16-10-1984 அன்று வந்தபோது...



தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடன் உரையாடுகிறார்.
( 18.12.1983 )

தாயாக, சகோதரியாக, தலைவியாக அவர் தாயக மண்ணிலும், வெளிநாடுகளிலும் உலவிய அந்த நாட்கள் நம் சிந்தனையில் மின்னுகின்றன. இந்திய நாட்டின் முன்னேற்றம் ஒன்றையே பெரிய இலட்சியமாகக் கொண்டு பணிபுரிந்த அந்த மேதையின் சுறுசுறுப்பான உருவம் இன்னும் நமது கண்முன்னே காட்சி தருகிறது. அவரது சிரித்த முகம்-சிந்தனை தேக்கிய நெற்றி-கூர்மை நிறைந்த பார்வை-நமது நெஞ்சில் படமாகப் பதிந்து விட்டன. முன்னேற்றமடைந்துள்ள இந்தியாவின் புது வடிவத்தை அமைத்தவர் இந்திரா தான் என்பதை உலக வரலாறு ஒவ்வொரு கணமும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

—தமிழ்ப்பித்தன்

# மாவட்ட ஆட்சித் தலைவர்கள் காவல் துறை அலுவலர்கள் கூட்டம்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் தலைமையில், தலைமைச் செயலகப் புதிய கட்டடத்தில் உள்ள பத்தாவது மாடியில்-மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை உயர் அலுவலர்கள் கூட்டம் 14.10.85 அன்று காலை 10 மணியளவில் தொடங்கியது.

இம் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவரும் பங்கேற்றார்கள். மாநாட்டின் துவக்கத்தில், விவாதிக்கப்பட வேண்டிய தலைப்புகள் பற்றி, அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி, இ.ஆ.ப. அவர்கள் துவக்க உரையாற்றினார்.







சட்டம் ஒழுங்கு, இலவசச் சத்துணவு, வளர்ச்சித் திட்டங்கள், நலத் திட்டங்கள் ஆகியவை குறித்துவிவாதிக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு அதற்கடுத்த இரு நாட்களும் (15.10.85 - 16.10.85) ஆக தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்றது.

இம்மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளைத் தலைமைச் செயலாளர் திரு டி. வி. அந்தோணி, இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட மாண்புமிகு முதலமைச்சர் கூறிய கருத்துக்களையும் அப்போது அவர் விளக்கினார்.

அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

குடிநீருக்காக 70 ஆயிரம் ஆழ்துளைக் கிணறுகளும், கைப்பம்புகளும், போடப்பட்டுள்ளன.

இவை சரியாக இயங்குகின்றனவா என்று அடிக்கடி கவனிக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அமைச்சர்களும் அந்த இடங்களுக்குத் திடீர் என்று சென்று சோதித்துப் பார்க்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநாட்டில் வலியுறுத்தினார்.

நானே அப்படிப்பட்ட திடீர் சோதனைகளைச் செய்யப்போகிறேன் என்றும் அவர் கூறினார்.

குடிநீர்த் திட்டங்களைத் தொடங்கிவிட்டு அவை செயல்பட மின்சாரம் கிடைப்பதில் தாமதம் ஏற்படக் கூடாது. வேலை முடிந்துவிட்ட 308 குடிநீர்த் திட்டங்களுக்கும் ஒரு மாதத்திற்குள் மின்சாரம் கொடுக்கப்பட வேண்டும் என்று முதல்வர் உத்தரவிட்டார்.

கடந்த மூன்று ஆண்டுகளாகப் போதிய மழை இல்லாததால் வறட்சி நிலை ஏற்பட்டது. இதனால் நிலத்தடி நீர் அளவு கீழே போய்க் கொண்டு இருக்கிறது.

ஆகவே எந்தெந்தக் கிராமங்களில் எவ்வளவு தூரத்தில் நிலத்தடி நீர் இருக்கிறது என்று மீண்டும் ஆய்வு நடத்த வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

நிலத்தடி நீரை அளவுக்கு அதிகமாக எடுப்பதைத் தடை செய்ய வேண்டும் என்றும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பற்றியும் இக்கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார். ஒரே இடத்திலேயே எல்லா லைசன்ஸ்சுகளையும் குறிப்பிட்ட நாளில் பைசல் செய்யும் முறை மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் சிறப்பாகச் செயல்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

20 அம்சத் திட்டப்படி சுயவேலை வாய்ப்பு1983-84ல் 17,500 பேர்களுக்குத் தர திட்டமிடப்பட்டிருந்தது; ஆனால் 21,250 பேர்களுக்கு அந்த உதவி கிடைத்தது.

1984-85ல் 21,700 பேர்கட்கு உதவ திட்டமிடப்பட்டு இருந்தது.

ஆனால் 22ஆயிரம் பேர்கட்குத் தொழில் தொடங்க ரூபாய் 42 கோடி கடனுதவி தரப்பட்டது.

1985-86ல் 8 ஆயிரம் சிறு தொழில்கள் பதிவு செய்ய குறியளவு இடப்பட்டு இருக்கிறது.

இதில் ஜூன் முடிய மூன்று மாதங்களில் 2,653 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1978ஆம் ஆண்டில் நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்கள் எண்ணிக்கை 18,789 தான். இந்த 7 ஆண்டுகளில் ஜூலை வரை பதிவு செய்யப்பட்ட சிறுதொழில்கள் எண்ணிக்கை 63,567 ஆக உயர்ந்துள்ளது.

1984-85ல் மட்டும் 12 ஆயிரம் சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தோல் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை வட ஆர்க்காட்டில் தொடங்க வேண்டும் என்று அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு டேனியல் குணாநிதி, இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

தொழில் தொடங்கும் வேகத்தைத் தளர விடக்கூடாது. மின் இணைப்புத் தருவதில் தாமதம் இருக்கக்கூடாது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.

மின் இணைப்புப் பெறுவதில் இருக்கும் சில நிபந்தனைகள் பற்றி ஆட்சித்தலைவர்கள் கூறினார்கள்.

அப்படிப்பட்ட தொல்லைகளைப்போக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்.

7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.5,750 கோடியில் மின்சாரத் திட்டங்களுக்கு ரூ.2,000 கோடி ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

ஆனால் 165.46 கோடி வசூல் ஆகியது.

இந்த ஆண்டுக்கு ரூபாய் 175 கோடி அளவு நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது.

சிறுசேமிப்பில் ரூ. 9 கோடியே 22 லட்சம் வசூல் செய்ததற்காக செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியாளர் திரு கே.ஏ. மாத்யூ இ.ஆ.ப. அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கேடயம் வழங்கினார். (15.10.85)



1984-85 ஆம் ஆண்டில் சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலம் ரூபாய் 136.5 கோடி வசூலிக்கத் திட்டமிடப்பட்டு இருந்தது.

ஆகவே 7வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சாரப் பிரச்சினை தீரக்கூடும்.

சிறுசேமிப்பு வசூலில் சிறப்பாகச் செயல்பட்டு சாதனை புரிந்த இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கட்கு 2 பரிசுகள் வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு செய்தார்.

ரூபாய் 5 கோடிக்கு மேல் உள்ள மாவட்டங்கள் என்ற வகையில் செங்கை மாவட்டம் ரூபாய் 9.22 கோடி வசூல் செய்தது. ரூபாய் 5 கோடிக்குக் குறைவாகக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு இருந்த மாவட்டங்களில் வட ஆர்க்காடு மாவட்டம் ரூபாய் 7.46 கோடி வசூலித்து சாதனை புரிந்து இருக்கிறது.

**மா**வட்டக் காவல்துறை உயர் அலுவலர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து உள்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு டி. வீ. வெங்கட்ராமன் இ.ஆ.ப. செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவை வருமாறு:

கொள்ளை, களவு, வழிப்பறி போன்ற திருட்டுக் குற்றங்களில் களவு போன சொத்துக்களில் அறுபதிலிருந்து 65 சதவிகித மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டுவிட்டன. இதுபோன்ற குற்ற வழக்குகளில் எழுபதிலிருந்து 75 சதவிகித இனங்களில் புலனாய்வு முடிந்து வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

கொள்ளை, களவு, திருட்டு, வழிப்பறி போன்ற குற்றங்களில் திறமையான புலனாய்வு செய்து குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தந்த வழக்குகளில் காவலர்களுக்கு வழக்கு ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வீதம் வழங்கப்பட்டுவரும் சன்மானத் தொகையை ஐம்பது ரூபாயாக உயர்த்தவும், இதேபோல தலைமைக் காவலருக்கு, பத்து ரூபாயிலிருந்து 75 ரூபாயாகவும், சப்-இன்ஸ்பெக்டருக்கு 15 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகவும் உயர்த்திக் கொடுக்கவும் முதலமைச்சர் உத்தரவிட்டார்.

இதேபோல குற்றப் புலனாய்வுப் பணியில் ஈடுபடும் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு, சட்ட நுணுக்கத்தில் போதிய பயிற்சி கொடுப்பதற்காக அரசாங்க உதவி வழக்குரைஞர்களை போலீஸ் பயிற்சிக் கல்லூரிகளில் நியமித்து பயிற்சி கொடுக்கலாம் என்ற யோசனை இக் கூட்டத்தில் ஏற்கப்பட்டது.

மதுரை, புதுக்கோட்டை, பெரியார், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கூடுதல் விசேஷ ஆயுதப் போலீஸ் படை அமைக்க வேண்டும் என்ற யோசனை கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு முதல் இவை செயல்படுவதற்கான உத்தரவும் அனுமதியும் வழங்கப்படும். ஒவ்வொன்றிலும் 120 பேர் அடங்கிய மொத்தம் ஐந்து பட்டாளங்கள் அமைக்கப்படும்.

முகமூடிக் கொள்ளை, வழிப்பறிக் கொள்ளை, சங்கிலி அறுப்பு போன்ற குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் போலீசாருடன் முன்னாள் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மாதந்தோறும் அமாவாசைக்கு ஒரு வாரம் முன்பும், பின்பும் இந்தத் தீவிர ரோந்துப் பணி நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக செங்கல்பட்டு கிழக்கு, மேற்கு, தென் ஆர்க்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களில் இக்குற்றங்களைத் தடுப்பதற்கு, தீவிர கண்காணிப்பு, இரவு ரோந்து நடத்தப்படுகிறது.

இதுபோன்ற கொடிய திருட்டு, கொள்ளை, வழிப்பறிக் குற்றங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வந்த ஓட்டேரி தாஸ், மணி ஆகிய இருவரையும் போலீசார் பிடித்து விசாரணை செய்ததில் பல வழக்குகளில் இவர்கள் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்தது. அவர்கள் காவலில் வைக்கப்பட்டனர். கோடம்பாக்கம், கருணாநிதி நகர், மதுரவாயல் போன்ற இடங்களில் கன்னக்கோல் போட்டு வீடு புகுந்து திருடிய வழக்குகளில் சம்பந்தப்பட்ட 21 பேர்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தருமபுரி மாவட்டத்தில் நக்சலைட்டுகள் எனப்படும் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள்



இலங்கைத் தமிழர் நிதிக்காக தமிழ்நாடு காவல்துறை சார்பாக ரூ.1 லட்சத்து 28 ஆயிரத்துக்கான காசோலையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் காவல் துறை தலைமை இயக்குநர் ஜெனரல் திரு வி.ஆர். லட்சுமிநாராயணன், 17.10.85ல் வழங்கினார்.

குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. சட்டப்பூர்வமாக இருக்க வேண்டிய அல்லது எடுக்கக்கூடிய நடவடிக்கைகளோடு, மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது, ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக நிறைவேற்றப்படும் திட்டங்களின் பலன்கள் அடிமட்டம் வரையில் சென்றடைவதற்கான ஏற்பாடுகள், கொள்ளை, வட்டி, சுரண்டல் போன்ற கொடுமைகளிலிருந்து அவர்களை மீட்பது உள்ளிட்ட சமூகப் பொருளாதாரத் திட்டங்களைச் செம்மையாக நிறைவேற்றி அதன் பலன்கள் உரியவர்களுக்குப் போய்ச் சேரும் வகையில் கண்காணிக்க வேண்டும் என்ற முடிவும் மேற்கொள்ளப்பட்டது.

கொலை, தற்கொலை, விபத்து போன்றவற்றில் இறந்தவர்களின் உடல்களை உடனுக்குடன், அந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து அகற்றப்படுவதற்கு வாய்ப்பாக மாவட்டந்தோறும் காவல்துறைக்கு ஒரு ஆம்புலன்ஸ் வண்டி வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று யோசனை கொள்கை அளவில் ஏற்கப்பட்டு, படிப்படியாக அமல் செய்யப்படும்.

குற்ற வழக்குகள் அதிக அளவில் தீர்வாகாமல் தேங்கியுள்ள இராமநாதபுரம், புதுக்கோட்டை உள்ளிட்ட சில மாவட்டங்களில் கூடுதல் முதல் வகுப்பு நீதிமன்றங்கள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் கொள்கை அளவில் ஏற்கப்பட்டது. இதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

குற்றப் புலனாய்வுப் பணிகளைத் துரிதமாகச் செய்து முடித்து வழக்குத் தொடர்வதற்காகக் கூடுதல் பணியாளர்கள் தேவை என்பதை அநேகமாக எல்லா மாவட்ட காவல்துறை அதிகாரிகளும் தெரிவித்தனர். இதற்காக இன்ஸ்பெக்டர்கள், காவலர்கள் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

குறிப்பாக வட ஆர்க்காடு, கோவை, நெல்லை கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் குற்றப் புலனாய்வுக்காக, கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

குமரி மாவட்டத்தில் உள்ள தனியான பிரச்னைகள் குறித்தும் ஆராயப்பட்டது. அம்மாவட்ட மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லாத காலங்களில் அவர்களுக்குப் பயனுள்ள வேலை வாய்ப்புத் திட்டங்களை அளிப்பதன் மூலம் பூசல் கலவரம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான திட்டங்களை நிறைவேற்றும்படி பல்வேறு துறைகள் கேட்டுக் கொள்ளப்படும்.

சமீபகாலங்களில் சாலை விபத்துக்கள் அதிகரித்துள்ளன. அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டது. அதன் தொடர்பாக, சில யோசனைகள் கூறப்பட்டிருக்கின்றன.




மதுரையில் நடைபெற்ற 5வது உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத்தை
அந்நாளைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் (10.1.1981)
பார்வையிடுதல்.



ஆனந்தமயமான தீபாவளிக்கு அழகுமயமான

கதராடைகள் -

பருத்தி, பாலியஸ்டர், பட்டு ரகங்களில்.

சிறப்புத் தள்ளுபடி

பருத்தி - **40%** பாலிஸ்டர் - **35%** பட்டு, கம்பளி - **25%**



எல்லா கதர் கிராமத் தொழில்

(காதிகிராப்ட்)

அங்காடிகளிலும் கிடைக்கும்.

கதர் அணியுங்கள்!

சிறப்பாகத் திகழுங்கள்!!

தமிழ்நாடு

கதர் கிராமத்

தொழில் வாரியம்

சென்னை-600 108.



# குழந்தை நலமே குடும்ப வளம்!

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணித் திட்டம் மைய அரசின் நிதியுடன் இயங்கிவரும் திட்டமாகும்.

கருவிலிருந்து தொடங்கி, குழந்தை ஆறு வயது முடிவடையும் வரை குழந்தைக்குத் தேவையான சத்துணவு, சுகாதாரப் பாதுகாப்பு, மன வளர்ச்சி ஆகியவற்றுக்கான நடவடிக்கைகள் இத்திட்டத்தில் அடங்கும். இத்திட்டம் 1975-76-ல் சோதனை அடிப்படையில் இந்தியா முழுவதிலும் 33 இடங்களில் செயல்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில்முதலில்இத்திட்டம் சென்னை, தருமபுரி மாவட்டத்தில் தளி வட்டம்,மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள நிலக்கோட்டை வட்டம் ஆகிய இடங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1982-83-ல் 27 இடங்களிலும், 1983-84-ல் மேலும் 9 இடங்களிலும் புதிய திட்டம்விரிவுபடுத்தப்பட்டது.

தற்போது இத் திட்டம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், ஆலந்தூர், காஞ்சிபுரம், திருவொற்றியூர், சேலம், தஞ்சாவூர், கும்பகோணம், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், இராஜபாளையம் ஆகிய நகரங்களிலும் நிலக்கோட்டை, தளி ஆகிய வட்டங்களிலும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் இத்தகைய 39 திட்டங்கள் 3503 அங்கன்வாடி மையங்களுடன் செயல்பட்டு வருகின்றன. அதாவது, 1975-76ல் 3 திட்டங்கள்; 1982-83ல் 27 திட்டங்கள்; 1983-84-ல் 9 திட்டங்கள் ஆக 39 திட்டங்கள்.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணித் திட்டத்தின் கீழும் 100 அங்கன்வாடி மையங்கள் உள்ளன. அவற்றில் ஒவ்வொரு மையத்தின் மூலமாக 40 முன்பருவப் பள்ளிக் குழந்தைகள், 2 வயத்திற்கும் கீழுள்ள 30 குழந்தைகள், மற்றும் 30 கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்கள் ஆக 100 பேர் பயனடைகின்றனர்.

இவ்வாறாக இந்த 39 திட்டங்களின் மூலமாகத் தமிழ்நாட்டில் 3900 பாலசேவிகைகளும், (இவர்களுக்கு மூன்றுமாதங்கள்சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது) 7800 உதவியாளர்களும் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

மைய அரசு ஆதரவு பெறும் இந்த ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணித் திட்டத்தின் கீழ்வரும் முன்பருவப் பள்ளிக் கல்வித் திட்டம், குழந்தை சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம், நோய்த்தடுப்பு முறைத்திட்டம் ஆகியவற்றுக்கு இந்திய அரசின் நிதி உதவி கிடைக்கின்றது. மதிய உணவுத் திட்டம், துணைச் சத்துணவுத் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு ஏற்படும் செலவினத்தை மாநில அரசு ஏற்கின்றது.

## சத்துணவுத் திட்டம்

துணைச் சத்துணவுத் திட்டம், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது 2 வயது முதல் 4 வயது வரை உள்ள 19.89 இலட்சம் குழந்தைகள் 1.8.1982ன்படி, சத்துணவு பெறுகின்றனர்.

## 'கேர்' உணவு

இரண்டு வயதுக்கும் குறைவான குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்குத் துணைச் சத்துணவு வழங்குவதற்கு 'கேர்' நிறுவனம் மூலம் கிடைக்கும் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய துணைச் சத்துணவு 1983 நவம்பர் முதல் 30 திட்ட மையங்களிலும் 1983-84ல் அனுமதி வழங்கப்பட்ட 9 திட்ட மையங்களில் 3-12-1984 முதற்கொண்டும் வழங்கப்படுகிறது.

ஒவ்வொருவரும் வாரத்திற்கு ஒருமுறை வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையில் தாய்மார்களுக்கு இப்பொருள்கள் அளிக்கப்படுகின்றன. குழந்தைகளுக்கு அங்கன்வாடி மையத்திலேயே உணவு வழங்கப்படுகின்றது. இவ்வாறாக இத்திட்டத்தின் கீழ்

70,220 குழந்தைகளும் 80,800 கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் பயனடைகின்றனர்.

### முன்பருவப்பள்ளிக் கல்வி

அங்கன்வாடி மையம் ஒவ்வொன்றிலும் 2 முதல் 4 வயது உள்ள 40 குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். எல்லா மையங்களிலும் சராசரியாக 30 முதல் 35 வரை குழந்தைகள் வருகை தருகின்றனர். இக் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதற்காக ஒவ்வொரு மையத்திலும் ரூ. 600 மதிப்புள்ள விளையாட்டுப் பொருட்கள் பொம்மைகள் முதலியன பாதுகாக்கப்படுகின்றன. இதற்கென்றே சிறப்புப் பயிற்சி பெற்ற அங்கன்வாடி அமைப்பாளர் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கின்றனர்.

### சுகாதாரப் பாதுகாப்பு

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்படி சுகாதாரப் பாதுகாப்புப் பணிகளை மருத்துவ அதிகாரியும், துணை மருத்துவப் பணியாளர்களும் கவனிக்கின்றனர். சென்னை எழும்பூரிலுள்ள குழந்தைகள் நல மருத்துவமனையைச் சேர்ந்த ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணித் திட்ட மூத்த ஆலோசகர் மற்றும் ஒருங்கிணைப்பாளரின் ஆலோசனையின் கீழ் மேற்கூறிய பணியாளர்கள் செயல்படுகின்றனர்.

1983-84-ல் மூன்று கட்டங்களில் டிசம்பர் '83, ஜனவரி '84, பிப்ரவரி'84-ல் தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது. 78.4% குழந்தைகள் இதன் மூலம் பயனடைந்தனர். மேலும் தட்டம்மை முகாம் ஒன்றும் அனைத்து 39 திட்டங்களிலும் நடைபெற்றது. 92சதம் குழந்தைகள் அதன் மூலம் பயனடைந்தனர்.

1984-85-ல் முழுமையான போலியோ தடுப்பு இயக்கம் 30 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்களிலும், 3 சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டங்களிலும் 3 கட்டங்களாக நவம்பர்'84, டிசம்பர் '84, பிப்ரவரி '85 ஆகிய மாதங்களில் நடைபெற்றன. 90 சதம் தகுதியுடைய குழந்தைகள் இதன் மூலம் போலியோ தடுப்பூசி அளிக்கப்பட்டனர். 1985-86-ல் 100 சதம் குழந்தைகள் இதன் மூலம் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது

குழந்தைகள் நல மையங்களுக்கு யூனிசெப் நிறுவனம் வைட்டமின் 'ஏ' மருந்துறைகளை வழங்கியுள்ளது. 6 மாதம்முதல்16 மாதங்கள் வரை உள்ள குழந்தைகளுக்கு இம்மருந்துறைகளை வழங்குவதற்கு அனைத்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்களிலும் இயக்கம் ஒன்றும் நடைபெற்றது.

சிறுகுழந்தைகளின் குடலில் காணப்படும் குடற்புழுக்களை அழிப்பதும் இந்த ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணித் திட்டத்தின் நோக்கமாக இருந்து வருகிறது. ஜூலை '84-ல் வைட்டமின் 'ஏ' மருந்துறைகளால் குழந்தைகள் பெறப்போகும் நன்மையை முன்னிட்டு அம் மருந்துறைகளைக் குழந்தைகளுக்கு வழங்குவதற்கு இரு வாரங்கள் முன்னதாக, இப்புழுக்களை அழிக்கும் முழுமையான இயக்கம் ஒன்றும் எல்லா ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்களிலும் நடைபெற்றது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணித் திட்டத்தில் பயன்பெறக் கூடிய குழந்தைகளின் நலனைக் குறிக்கும் பதிவேடுகளும் குழந்தை நல மையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப் பதிவேடுகளுடன், தமிழ்நாட்டில் இயங்கிவரும் எல்லா அங்கன்வாடி மையங்களிலும் குழந்தைகளின் ஊனம் பற்றிய பதிவேடுகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

### நிர்வாக அமைப்பு முறை

தற்போது இயங்கிவரும் 39 திட்டங்களில் இரு திட்டங்கள் தவிர மற்றவை நகரப்பகுதியைச் சார்ந்தவை. நிலக்கோட்டை மற்றும் தளி திட்டங்கள் ஊரகப் பகுதியைச் சேர்ந்தவை. நகர திட்டங்களில், உடல் நலத்தைப் பற்றிய விவரங்கள் முழு நேர மருத்துவர்களால், 4 துணை செவிலியருடன் பார்க்கப்பட்டு வருகின்றன. 2 ஊரக திட்டங்களைப் பொறுத்த அளவில், மருத்துவ அதிகாரிகள் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த ஆரம்ப சுகாதார மையங்களில் பணிபுரிபவராகவும் இருக்கிறார்.

ஒரு திட்டத்திற்கு ஒருவர் என்ற வீதத்தில் உரியவர் நியமிக்கப்பட்டுள்ளனர். இம்மாதிரி நியமிக்கப்பட்டுள்ளவர் அந்தந்தப் பகுதியில் இயங்கும் தலைமை மருத்துவமனை அல்லது மருத்துவக் கல்லூரிகளில் பணி புரியும் முதுநிலை மருத்துவர்களாக இருப்பர்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இத் திட்டத்தை நல்ல முறையில்



செயலாக்குவதற்கான பயிற்சியை அளிப்பது மிக முக்கியமான தொன்று. குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் முதல் அங்கன் வாடிப் பணியாளர் வரை அனைவருக்கும் குறிப்பிட்ட பாடத் திட்டத்தின்படி முறையான பயிற்சி அளிக்கப்படுகிறது.

**யூனிசெப் மற்றும் 'கேர்' நிறுவனங்கள்**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் யூனிசெப் மற்றும் 'கேர்' நிறுவனத்தின் பணி மிக முக்கியமானதாகும்.

*1984-85* மற்றும் *1985-86* ஆண்டுகளில் 39 திட்டங்களுக்கும் வைட்டமின் 'ஏ' மருந்துமுறைகளை 'யூனிசெப்' நிறுவனம் வழங்கியுள்ளது. திட்டங்களில் பழுதாய்க் கிடக்கும் கைப்பம்புகளைப் பழுது பார்க்கவும் யூனிசெப் முன் வந்துள்ளது.

'கேர்' நிறுவனம் படச்சுருளை படமிடும் கருவியையும், படச் சுருள்களையும் வழங்கியுள்ளது. மேலும் இந்நிறுவனம் இலவசமாக இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு சி.எஸ்.எம். மாவும், சாலட் எண்ணெய்யும் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு பல்கர் கோதுமையும் சாலட் எண்ணெய்யும் வழங்கி வருகிறது.

**தொடர்புப் பிரிவு**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணித் திட்டத்தில் மிக முக்கியப் பங்கு வகிப்பது இந்தத் தொடர்புப் பிரிவு. இப்பிரிவின் மூலமாகத்தான் திட்டத்தின் அடிப்படை அம்சங்களான சத்துணவு, உடல் நலம் மற்றும் கல்வி ஆகியவற்றின் முக்கியத்துவத்தினை அந்தந்தப் பகுதிகளில் வாழும் முன் பள்ளிக் குழந்தைகளுக்கும், கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்களுக்கும் பிற மக்களுக்கும் உணர்த்துவதில் துணை புரிகிறது. இதன் மூலம் குழந்தைகளின் உடல் நலம் முன்னேறுதலும் அவர்களிடையே நல்லொழுக்கம் வளர்தலும், அவர்களது முழு வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவதன் அவசியம் எடுத்துரைக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் பணிகள் பொதுமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பெற்றோர்களும், தாய்மார்களும் இத்திட்டத்தில் முழுமையாக ஈடுபட்டால்தான் செய்யும் பணிகளின் முழுப் பயன் அடைய ஏதுவாகும்.

## தமிழகத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்

### *சில விவரங்கள்*

| | | |
|---|---|---|
| மாநிலத்தின் பெயர் | .. | தமிழ்நாடு |
| திட்டங்களின் எண்ணிக்கை | .. | 39 திட்டங்கள் (37 நகரப்பகுதியிலும் 2 ஊரகப்பகுதியிலும்) |
| உள்ளடக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை | .. | 15 |
| உள்ளடக்கப்பட்ட மாநகராட்சிகளின் எண்ணிக்கை | .. | 3. சென்னை, மதுரை கோயம்புத்தூர் |
| உள்ளடக்கப்பட்ட நகராட்சிகளின் எண்ணிக்கை | .. | 16 |
| பணிபுரியும் அங்கன்வாடிப் பணியாளர்களின் எண்ணிக்கை | .. | 3503 |

**அங்கீகரிக்கப்பட்ட களப் பணியாளர்கள்**

| | |
|---|---|
| குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள்: | 39 (3+27+9) |
| மருத்துவ அலுவலர்கள்: | 39 |
| மேற்பார்வையாளர்: | 158 |
| பெண் உடல்நலப் பார்வையாளர்: | 4 |
| தாய்மைத் துணைச் செவிலியர்: | 166 |
| அங்கன்வாடிப் பணியாளர்கள்: | 3900 |
| உதவியாளர்கள்: | 3900 } 3900 } |

ஒரு தாய் தன் குழந்தையை நன்கு வளரச் செய்வதும் அத்தாயின் மனதில் ஊட்டச்சத்து, ஒழுங்கு மற்றும் வளமான உடல் நலத்தைக் கொண்ட குழந்தை பற்றிய சிந்தனைகளை எழுப்புவதும்தான் இப்பிரிவின் முக்கிய நோக்கமாகும்.

இத்தொடர்புப் பிரிவின் நோக்கம் இரண்டு எனலாம். (1) அங்கன்வாடிப் பணியாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் பயிற்சி அளிப்பது. (2) மக்களிடம் குழந்தைகள் நலம் பற்றிய விழிப்பு உணர்ச்சியை ஊக்குவிப்பது.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துணவுத் திட்டம் மாவட்டங்களில் அரசு அங்கீகாரம் பெறும்போது தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத் துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச் சித் திட்டமாக மாற்றப்படும்.



# சம்பா விளைச்சல் பெருகிட..

குறுவைப் பயிரில் ஏற்பட்டுள்ள இழப்பை சம்பா பயிரில் சரிக் கட்ட தமிழ்நாடு வேளாண்மைத் துறை நவீன தொழில் நுட்பங் களைக் கையாள முடிவு செய் துள்ளது.

சென்ற ஆண்டில் 11 இலட்சம் மெட்ரிக் டன் அளவு குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் 7 இலட்சம் மெட்ரிக் டன் அளவு கிடைக் கும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. மாவட்டங்களில் குறுவைப் பயிர்கள் அறுவடை செய்ததில் சராசரியாக எக்டேருக்கு 5 டன் அளவு நெல் மகசூல் கிடைத்துள் ளது. நடப்பு ஆண்டில் நீர்வரத்து பற்றாக்குறையால் குறுவை நெல் 65 சதவித பரப்பில் மட்டும் பயிரிடப்பட்டு உள்ளது. சம்பா 20 சதம் பரப்பளவில் பயிரிடப் பட்டு உள்ளது. சம்பாவிற்கு நாற்றங்கால் தயாரிக்கப்பட்டு வருகிறது. வடகிழக்குப் பருவ மழை மூலம் 15 இலட்சம் எக் டேரில் சம்பா பயிரிட ஏற் பாடுகள் நடந்து வருகின்றன. சம்பா அமோக விளைச்சல் பெற விவசாயிகள் முன்னேறிய நவீன தொழில் நுட்பங்களைக் கையாள கிராமங்கள் தோறும் பயிற்சி முகாம்கள் நடந்து வருகின்றன.

இறவையில் மழை நன்கு பெய் துள்ளது. சிறு தானியங்கள் நன்கு விளைந்துள்ளன. இதுவரை 10.85 இலட்சம் எக்டேரில் சிறு தானியம் பயிரிடப்பட்டுள்ளது. மேலும் 7.15 இலட்சம் பரப்பில் பயிரிடப்பட உள்ளது.

தமிழக அரசு பயிர்ப் பாது காப்பு வேளாண் காடுகள் பரா மரிப்பு, உற்பத்தி, ஊக்கத்தொகை, நிலச்சீர்திருத்தம், நீர் நிர்வாகப் பயிற்சி நிலையம் இலவச சிறு தளைத் திட்டம் ஆகியவற்றிற்கு ரூ. 20 கோடியளவு நிதி ஒதுக்கி யுள்ளது. விவசாயிகள் இலாபம் பெறுவதற்காக உயர்ந்தபட்ச மானியத் தொகைகள் வழங்கப் பட்டு வருகின்றன.

தஞ்சாவூர், திருச்சி பகுதிகளில் அதிக கவனம் செலுத்தி விளைச் சலைப் பெருக்க தீவிர நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கரும்பு, பருத்தி விளைச்சல் சென்ற வருடத்தைப்போல சிறப் பாக உள்ளது.

இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை, கால தாமதமாகவும் குறைவாகவும் பெய்ததால் குறுவை நெல் 65 சதவிகிதம் மட்டும் பயிரிடப்பட்டது. இதன் மூலம் எக்டேருக்கு 5 டன் நெல் எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பா பயிர் 8.8 இலட்சம் எக்டேரில் 20சதவிகிதம் மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழையின் மூலம் 18 இலட் சம் எக்டேரில் பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேலும் சம்பா விளைச்சலை அதிகரிக்க பல வகைகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டு முயற்சிகள் செய் யப்பட்டு வருகின்றது.

**பயிற்சி மையம்**

பாசன நீரை முறையாகப் பயன் படுத்த களப்பணியாளர்களுக்கும் உழவர்களுக்கும் பயிற்சிகொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அப் படிப்பட்ட பயிற்சி மையம்ஒன்று ரூ. 57 இலட்சம் செலவில்அமைக் கப்பட உள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தம் 104 நீர்ப்பிடிப்புப்பகுதிகளில் முன் னேற்றம் அடைந்த உழவியல் நுட்பங்கள் கையாளப்பட்டு வரு கின்றன. இதனால் 28 ஆயிரத்து 300 எக்டேர் மானாவாரி நிலம் பயன் அடைகிறது.

**தானியங்கள்**

உழவர்களுக்கு 8 ஆயிரத்து 200 டன் விதை வினி யோகம் செய்யப்பட்டுள்ளது.

**பருத்தி**

99 ஆயிரம் எக்டேர் பரப்பள வில் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. 800 குவிண்டால் பருத்தி விதை உழவர்களுக்கு வினியோகம் செய்யப்பட்டுள்ளது.

**பயறு வகைகள்**

மொத்தம் 3.55 இலட்சம் எக்டேரில் பயறுவகைகள் பயிரி டப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒன்றரை இலட்சம் டன் உற் பத்தி கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

**பாதுகாப்பு**

துங்கரோ என்ற நோயைக் கட்டுப்படுத்த ரூ. 6 கோடியே 55 இலட்சம் செலவில் பாது காப்பு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. 50 சதவிகித மானியத் தில் பூச்சி நாசிணிகள் உழவர் களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**ஒன்றரைக் கோடி**

மேலும் ரூ. 1 கோடியே 42 இலட்சம்செலவில் பூச்சிநோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. 772 அரசுக் கிடங்குகளில் தேவையான பூச்சி மருந்து இருப்பு வைக்கப்பட்டுள் ளன.

**உற்பத்தி பெருக்க**

நெல் உற்பத்தியைப் பெருக்க உழவர்களுக்கு ஊக்கத் தொகை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15-ல் இருந்து ரூ. 20 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

[வேளாண்மைத்துறை இயக்குநர் திரு என். ஆதிமூலம் இ.ஆ.ப செய்தியாளர்கட்கு 10.10.1985 அன்று அளித்த பேட்டி].

### எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் :

# வறுமைப் பிடியிலிருந்து விலகினோம்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், நலிவடைந்த மக்களுக்கு நல்வாழ்வை அளிக்க உதவுகின்ற ஒரு நல்ல திட்டம் என்பதில் யாருக்கும் எந்தவித ஐயப்பாடும் இல்லை.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் ஏழைகளுக்கு உடனடியாக உதவிகள் செய்து பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வாழ்வளித்து, அவரவர்கள் வறுமைப்பிடியிலிருந்து விடுபட்டு, சீரோடும் சிறப்போடும் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு இந்தத் திட்டம் ஒரு வரப்பிரசாதமாக விளங்குகிறது.

ஆண்டொன்றுக்குரூ.3500க்குக் குறைவாக வருமானம் உள்ள குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வருவதாகக் கருத்தில்கொண்டு, அவர்களுக்குக் கடன், மானியம் மற்றும் விற்பனை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து வறுமையைப் போக்கும் பணியில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் செயல்பட்டுவருகிறது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், ஒவ்வொரு வட்டாரத்திலும், ஆண்டொன்றுக்கு 600 குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, உதவி புரிவதற்கு ரூ. 35 இலட்சம் மானியம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த 600 குடும்பங்களில் 50 சதவீதம் மலைச்சாதியினர் மற்றும் ஆதிதிராவிடர்கள். 200 பேர் பெண்களாகவும் இருக்கவேண்டும் என்று அரசு குறியீடு நிர்ணயித்துள்ளது.

சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் மானியமும், குறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள் மற்றும் இதர ஏழை மக்களுக்கு 33 1/3% மானியமும், மலைச்சாதி மக்களுக்கு 50%. மானியமும்,



ஆதிதிராவிடர்களுக்குப் பால் மாடுகள் வழங்கும் திட்டத்துக்கு 33 1/3%. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாகவும், 16 2/3% மத்திய அரசின் தனித் திட்டம் வாயிலாகவும் மொத்தம் 50%. மானியமாக அளிக்கப்படுகிறது. உயர்ந்த பட்சமாக ஒரு குடும்பத்திற்கு ரூ. 3000 மானியம் அளிக்கப்படலாம். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட மானியத்தை மத்திய மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாகப் பயனடைந்தவர்கள் பலர். அவர்களில் சிலரைச் சந்தித்த போது:—

**திரு. அ. சிலுவை**

வாட்டிய வறுமையைப் புறங்காட்டி ஓடச் செய்த மீனவர் திரு அ. சிலுவை கூறுகிறார்:

"ஆறாவது வகுப்பில் படிக்கும் பொழுது, தாய், தந்தையை இழந்த நான், என்னுடைய இரு தங்கைகளையும் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால், பள்ளிப்படிப்பை விட்டு, கூலிவேலைக்காக கடலில் மீன் பிடிக்கச் சென்றேன். எப்பொழுதும் ஒரே மாதிரியான வருமானம் கிடைக்காததால் வறுமையில் மிகவும் வாடினோம். கூலி வேலைக்குச் சென்று, தினம் சராசரி ஐந்து ரூபாய் கிடைப்பதை வைத்தும் வாழ்க்கையை நடத்தி வந்தோம்.

"நான் வறுமையில் வாடுவதைக் கண்ட ஊர்நல அலுவலர் என்னை அணுகி, சமுதாயத்தி



லுள்ள ஏழை, எளிய பிரிவினரின் நலம் பேணும்வகையில், கிராமப் புற மக்களை வறுமைக்கோட்டிற்குமேல் கொண்டுவரும்புரட்சிகரமான திட்டமாகிய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக எந்தவித ஜாமீனும் இல்லாமல் கட்டுமரம் தருகிறோம் என்று கூறினார்.

''1984-ல் நடந்த குடும்பப் பட்டியல் தாயாரிப்பில் என்னுடைய குடும்பமும் ஆய்வுசெய்யப்பட்டு பயனடைவோர் பட்டியில் என் பெயரும் இடம் பெற்றது. ஸ்டேட் பாங்க் ஆப் திருவிதாங்கூர் கிளை, கன்னியாகுமரி வாயிலாக 10-3-1984-ல் கட்டுமரம் வாங்குவதற்கு 5000 ரூபாய் மானியத்துடன் கூடிய கடன் வட்டார வளர்ச்சி அலுவலர் உதவியுடன் எனக்குக் கிடைத்தது. முதலில் கூலிவேலை செய்து வந்த நான் மேலும் மூன்று பேர்களை வைத்து, வாடகைக்குவலையும் எடுத்து, தொழில் நடத்தி, கடன் தொகையை தவணை தவறாமல் செலுத்திவந்தேன். ஆதலால் 30-3-1985-ல் குமரி மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் திட்டஅலுவலர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் மீன்பிடி வலை வாங்குவதற்காக 3000 ரூபாய் மானியத்துடன் கூடிய கடன் கிடைப்பதற்கு வழிவகை செய்தார்கள்.

''இப்பொழுது எனக்குச் சொந்தமாக எல்லாச் சமயத்திலும் பயன்படும் கட்டுமரம் ஒன்றும், மீன்பிடி வலையும் இருக்கின்றன. நான் வேலைக்கு வைத்திருக்கும் ஆட்களுக்குக் கூலிகொடுத்தது போக எனக்குத் தினம் சராசரி 17 ரூபாய் கிடைக்கிறது. கடன் தவணையைச் செலுத்திவிட்டு மீதித் தொகையை என்னுடைய தங்கைகளின் திருமணத்திற்காகச் சேமிக்கிறேன். விரைவில் அவர்கள் திருமணத்தை முடித்துவிட்டு, என்னுடைய திருமணத்தையும் நடத்துவேன்.''

**திரு. சாகுல் அமீது**

தோவாளை வட்டாரத்திலுள்ள, மாதவலாயம் என்ற கிராமத்தில் திரு சாகுல் அமீது என்பவர் தன்னுடைய மனைவி, மற்றும் நான்கு குழந்தைகளையும் காப்பாற்றுவதற்குத் தினசரி ரூ. 2.50 கொடுத்து வாடகை மிதிவண்டி எடுத்து மீன் வியாபாரம் செய்துவந்தார். அவர் கூறுகிறார்:

''1984-ல் கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நடத்திய குடும்பப்பட்டியல் தயாரிப்பில் என்னுடைய குடும்பம் ஆய்வு செய்யப்பட்டு, பயனடைவோர் பட்டியலில் இடம் பெற்றது. பாரத ஸ்டேட் பாங்க் கிளை நாகர்கோவில் வழியாக மானியத்துடன் கூடிய கடன் ரூ. 750 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக மிதிவண்டி வாங்குவதற்கு எனக்கு அளிக்கப்பட்டது. கடன் பெறுவதற்கு முன் தினசரி ரூ. 3 வருமானம் பெற்றுவந்த நான் இப்பொழுது தினசரி ரூ. 7 வருமானமாகப் பெற்று, குடும்பத்தில் நிலவிவந்த வறுமையை விட்டு, நல்வாழ்வை நோக்கி வந்துகொண்டிருக்கிறேன்.''



**திரு பேதுரு**

புத்தேரி பாறையடி அருகே, கோடை மழை எப்போது பொழியலாம் என யோசித்துக் கொண்டிருக்கிறது. வடக்கே குறுமுனி மலையிலிருந்து இதமாகக் காற்று வீசிக்கொண்டிருக்கிறது. நாற்புறமும் நன்செய் நிலங்கள். நடுவே பொற்றாமரைக் குளத்தை ஒத்த ஏரி. அங்கே கையிலே கோலேந்தி வாத்துக்களை மேய்த்துக் கொண்டிருக்கும் திரு பேதுருவுடன் கலந்துரையாடுகிறோம். பேச்சிலே தெளிவு, நம்பிக்கை தெரிகிறது:

'' ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் வாயி



ளாக 1984-ஆம் ஆண்டு ரூபாய் 2,200 மானியத்துடன் கூடிய கடன் அனுமதிக்கப்பட்டு, 100 பெண்வாத்துகளும், 10 ஆண் வாத்துகளுமாக மொத்தம் 110 வாத்துகள் எனக்கு வழங்கப்பட்டன. வறுமையில் வாடிய எனக்கு இப்பொழுது நாள் ஒன்றுக்கு ரூ.35 வருமானம் கிடைக்கிறது. நன்செய் நிலங்கள் நல்விளைச்சல் பெறும்போது தன் லாபமும் அதிகமாக இருக்கும்.''



**திரு எம் கிருஷ்ணன் குட்டி காணி**

திரு எம். கிருஷ்ணன் குட்டி காணி மலைவாழ் சாதியைச் சார்ந்தவர். ஏழாம் வகுப்பு வரை படித்த இவருக்கு வயது 35. இவருடைய மனைவி திருமதி சேதுபாய். இவர்களுக்கு மூன்று குழந்தைகள் இருக்கிறார்கள். கிருஷ்ணன்குட்டியின் வயதான தாயாரும் அவருடன் வசித்து வருகிறார். கிருஷ்ணன் குட்டி காணி கூறுகிறார்:

''தினமும் சராசரி ஆறுரூபாய் சம்பாதித்து, குடும்பம் நடத்தி வறுமையில் வாடிய என்னை மாநில அலுவலர் அணுகி, பச்சைப்பசேலென புற்கள் இங்கு ஏராளம் கிடைப்பதால் உங்கள் வறுமையை அகற்ற ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக பால்மாடு வாங்க மானியத்துடன் கூடிய கடன் கிடைப்பதற்கு வழிவகை செய்யலாம் எனக்கூறியிருந்தார்.

''1984-ல் கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம், நடத்திய குடும்பப்பட்டியல் தயாரிப்பில் என்னுடைய குடும்பம் இடம் பெற்றிருந்ததால் 1984 மே மாதம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி-'களியல்' மூலம் பால் மாடு வாங்க மானியத்துடன் கூடிய கடன்3000/-ரூபாய் வழங்கப்பட்டது. அதில் 1500/- ரூபாய் மானியமாக அளிக்கப்பட்டது. வாங்கிய கடனைத் தவணை தவறாமல் செலுத்தி வந்தேன். அதனால் மீண்டும் 25.3.85 மற்றொரு பசுமாடு வாங்க மானியத்துடன் 2400/- ரூபாய் எனக்கு வழங்கப்பட்டது. இரண்டு மாடும் சேர்ந்து கொடுக்கும் பாலின் மூலம் தினசரி வருமானம் 18/-ரூபாய்கிடைக்கிறது. இப்போது நான் கஷ்டமில்லாமல் வாழ்ந்து வருகிறேன்.

**திருமதி சிவகாமி**

இயற்கையின் ஏமாற்றத்தால் வெறிச்சோடிக்கிடக்கும் நன்செய் நிலங்கள். அதன் ஒரு ஓரமாம் நாகர்கோவில்கீரிப்பாறை நெடுஞ்சாலை. அதன் ஒரு பகுதியில் அமைந்துள்ளது புத்தேரி என்னும் சிற்றூர். அவ்வூரில் தெற்குத் தெருவில் தன் இரண்டு குழந்தைகளுடன் ஒரு சிறுவீட்டில் கூலிவேலை செய்து வசித்து வருகிறார் திருமதி சிவகாமி அம்மையார். அவர் கூறுகிறார்:

''எங்கள் ஊர் நல அலுவலர் இராஜாக்கமங்கலம்ஊராட்சிஒன்றிய ஆணையர் மூலம், வடசேரி யூனியன் வங்கி ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித் திட்டத்தின்கீழ் 3 ஆடுகளும் 1 கிடாவும் பெற்றேன். கடனும் மானியமும் ரூ. 900 அதில் ரூ. 300 பெற்றேன். தற்போது 3 ஆடுகளும் தலா இரண்டு குட்டிகள் வீதம் பெற்றுள்ளன. இப்பகுதியில் ஆட்டுத் தீனிக்குச் செலவா என்ன ஒன்றுமில்லை''



ஈராண்டுக்குப் பிறகு சிவகாமி அம்மாள் ரூ. 5000 மதிப்புள்ள ஆட்டுப்பண்ணைக்குச் சொந்தக்காரியாகி விடுவார். 1 கடா நல்லமுறையில் வளர்த்து விற்றால் ரூ. 400 கிடைக்கும். வங்கிக் கடனை ஒழுங்காகக் கட்டிவரும் சிவகாமி அம்மாள், நான்காண்டு கழிந்தால் ஒரு ஆட்டுப்பண்ணைக்கே சொந்தக்காரியாகி விடுவார். உதவிபெறுவதற்கு முன் 4 ரூபாய் தினசரி சம்பாதித்து வந்த இவர், தற்பொழுது சுமார் ரூ. 15 வரை சம்பாதிக்கிறார்.

# குமரி மாவட்டத்தில் குடும்ப நலம்

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 1984-85-ஆம் ஆண்டுக்கு 18,100 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய இலக்கு அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தீவிர கண்காணிப்பும், கவனமும் செலுத்திய பின்னரும் 10,718 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 414 ஆண்கள். 10,304 தாய்மார்கள் ஆவர்.

இம்மாவட்டத்தில் அரசினர் ஆதார நல நிலையங்கள், அரசினர் மருத்துவமனைகள் 109ம் தனியார் மருத்துவமனைகள் 19ம் அறுவைச் சிகிச்சை செய்வதறகு அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியீட்டினை அடைய சுமார் 7020 நவீன கருத்தடை அறுவைச் சிகிச்சை முகாம்கள் நடைபெற்றன. இம்மாவட்டத்தில் நவீன கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்வதற்கு அரசு தலைமை மருத்துவமனையிலும், குழித்துறை, பத்மநாபபுரம் அரசு மருத்துவ மனைகளிலும் வசதிகள் உள்ளன. இங்கு எல்லா நாட்களிலும் நவீன கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் நடைபெறுகின்றன.

கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொள்பவர்களுக்கு அரசினால் வழங்கப்படும் ஈட்டுத் தொகை தவிர, சுமார் 50 ரூபாய் பெறுமான சேலை, எவர்சில்வர் தட்டு, கப் மற்றும் தமிழ்நாடு அரசு லாட்டரிச் சீட்டுகள் 5 வழங்கப்படுகின்றன.

இம்மாவட்டத்தின் குடும்ப நலக் குறியீட்டினை அடையப் பல்வேறு விளம்பரங்களும் பிரச்சாரங்களும் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் முக்கியமாக தமிழக அரசால் நடத்த ஆணையிடப்பட்ட 35 கிராமியத் தலைவர்களுக்கான குடும்பநலப்பயிற்சி முகாம், கிராமிய குடும்பநல நிலையங்கள், நகரிய குடும்பநல நிலையங்கள், வயது வந்தோர் கல்வி நிலையங்கள், மாதர் சங்கங்கள், இளைஞர் மன்றங்கள் மற்றும் முன்னணிச் சங்கங்கள் ஆகியவை வழியாக நடத்தப்பட்டன.



இது தவிர, மேற்குறிப்பிட்ட 35 கிராமிய குடும்பநலப் பயிற்சி முகாமில் கலந்துகொண்ட பயிற்சி பெற்ற குடும்ப நலத் தலைவர்களைக்கொண்டு மாவட்ட அளவிலான குடும்பநலப் பயிற்சி முகாம் ஒன்றும் நாகர்கோவிலில் நடைபெற்றது. அத்துடன் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்குக் குடும்பநலம் பற்றிய ஒரு நாள் கருத்தரங்கும் நாகர்கோவிலில் நடத்தப்பட்டது. அத்துடன் இந்திய மருத்துவம், சித்தா மற்றும் ஹோமியோபதி மருத்துவர்கள், தாங்களும் எவ்வாறு குடும்பநல முறைகளைத் தங்களிடம் சிகிச்சை செய்து கொள்ள வரும், தகுதி வாய்ந்த தம்பதியரிடம் கூறி, அவர்களும் குடும்பநலப் பணியில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு நாள் கருத்தரங்கமும் நாகர் கோவிலில் நடத்தப்பட்டது.

குடும்பநலம் பற்றிய பிரச்சாரப்பணி கலைநிகழ்ச்சி மற்றும் நாடக வழி நடத்தப்பட குமரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 9 நாடகங்கள் மற்றும் 10 கலை நிகழ்ச்சிகள் கிராமப்புறங்களிலும் நகரின் முக்கியப் பகுதிகளிலும் குடும்பநல இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட அணியினரால் நடத்தப்பட்டன. 'அஸ்திவாரம் தெரிவதில்லை' என்ற குடும்ப நலப் பிரச்சார நாடகம் ஒன்று புகழ்பெற்ற திரைப்பட நடிகர்களால் திங்கள்நகர் திடலில் நடத்தப்பட்டது. குடும்பநலப் பட்டி மன்றங்கள் பேராசிரியர் மகாலிங்கம் போன்ற சொல்வல்லுநர்களின் தலைமையில் மிக அருமையான முறையில் நடத்தப்பட்டது.

குடும்பநலச் செயலகத்தால் நடத்தப்படும் விளம்பரப் பணி மற்றும் பிரச்சாரப்பணி வழி குடும்பநலத் திரைப்படக் காட்சிகள் 211 நடத்தப்பட்டன. இத்தகைய பிரச்சாரங்களினால் பொதுமக்கள் குடும்பநலத்தின் மேன்மையைத் தக்க வகையில் உணர்ந்து அதனை மேற்கொள்வதற்கு ஆர்வம் காட்டிவருகிறார்கள்.

பி. பி. ஜெயசங்கர்
மாவட்டக் குடும்பநல தாய் சேய் நல அலுவலர், கன்னியாகுமரி.

# புகழுக்குரிய பசும்பொன்னார்



இராமநாதபுரம் மாவட்டத்திலே பசும்பொன் என்னும் சிற்றூரிலே உக்கிரபாண்டித் தேவர், இந்திராணி தம்பதியருக்கு 30-10-1908-ல் மகனாகத் தோன்றியவர் முத்துராமலிங்கத் தேவர். அவர் பிறந்த ஊருக்கே தனிப்பெருமை உண்டு. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பிறந்த ஊர்தான் பசும்பொன் என்று வரலாற்றாய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

தமிழ் உணர்வு, ஆன்மீக நெறி, நாட்டுப்பற்று, ஏழைக்கு உதவும் இயல்பு, அஞ்சா நெஞ்சம் இவை எல்லாம் முத்துராமலிங்கனாரின் சிறப்பியல்புகள் ஆகும். வசதி படைத்தவராக இருந்தபோதிலும் ஏழை எளியவர்களுக்காகவே வாழ்ந்தார். மக்களின் சுகத்தையே தமது சுகமாகக் கருதினார். வாழ்நாளின் இறுதிக் காலத்தில் வாடகை வீட்டில் குடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எளிய வாழ்க்கை வாழ்ந்ததில் இவருக்கு ஈடு இல்லை என்றே சொல்லலாம். துண்டை விரித்து, கையைத் தலைக்கு வைத்துப் படுத்தார். காலையில் நீராகாரம் பருகி வந்தார். பழைய சாதம் சாப்பிட்டு வந்தார். பசும்பொன் கிராமத்தின் ஜமீந்தார் என்று அவரை எவரும் சொல்ல முடியாத வகையில் எளிமையை மேற்கொண்டிருந்தார்.

தமக்குச் சொந்தமான நிலங்களை எல்லாம் குத்தகைக்கு எடுத்துப் பயிரிட்டு வந்த விவசாயப் பெருமக்களுக்கே கொடுத்துவிட்டார்.

தான் பிறந்த சமூகத்திற்கு வெள்ளை அரசினால் ஏற்படுத்தப்பட்டிருந்த அவப்பெயரை சட்டமன்ற உறுப்பினராகி, வாதிட்டு நீக்கம் செய்தார்.

பொதுத்தேர்தல் நேரங்களில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்துவிட்டு, பிரச்சாரத்திற்குச் செல்லாமல் இருந்த இடத்திலிருந்தே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவது முத்துராமலிங்கனாரின் வாழ்க்கை ஏட்டில் சாதாரணமான நிகழ்ச்சி. மக்கள் அவரிடம் வைத்திருந்த நம்பிக்கைக்கு அது எடுத்துக் காட்டும் ஆகும்.

> **பாராட்டுக்குரிய பசும்பொன்னார்**
>
> தேவருக்கு நாம் செய்யும் ஒரே கடமை அவருடைய ஆத்மா சாந்தி அடைய நாம் எடுத்துக் கொள்ளும் ஒரேபணி-தேவருடைய புனிதமான உள்ளத்தில் உறைந்து கிடந்த எண்ணங்களை நிறைவேற்றுவதுதான்.
>
> —பேரறிஞர் அண்ணா

தமிழ்ச் சான்றோர்கள், நாட்டுக்கு உழைத்த தலைவர்கள் ஆகியோரைப் பெருமைப்படுத்துவதை, தனது குறிக்கோளாகக் கொண்டிருக்கும் தமிழக அரசு அந்நாளைய கேரள ஆளுநர் மேதகு ஜோதி வெங்கடாசலம் அவர்களைக் கொண்டு சட்டமன்றப் பேரவையில் பசும்பொன்னாரின் திரு உருவப்படத்தை 8.9.1980 அன்று திறந்து வைத்துச் சிறப்புச் செய்தது.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரித்து புதிய மாவட்டங்களை உருவாக்கியபோது பசும்பொன்னார் பெயரில் ஒரு மாவட்டத்தை அமைத்து அவரது நினைவைப்போற்றியிருக்கிறது தமிழக அரசு. சிவகங்கை, இளையான்குடி, மானாமதுரை, தேவகோட்டை, திருப்பத்தூர், காரைக்குடி ஆகிய பகுதிகள் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் அமைந்துள்ளன. இந்த மாவட்டத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 17.7.84ல் முறைப்படி தொடக்கி வைத்தார்கள்.

அக்டோபர் 30-ஆம் நாளில் தோன்றிய பசும்பொன்னார் அவர்கள் (1908) அதே அக்டோபர் 30-ஆம் நாளில் (1963) மறைவு எய்தினார் என்பது குறிப்பிடத்தக்க செய்தி. அவரது நினைவைப் போற்றுவோம்!

—சுந்தர்






திருச்சியில் (18.10.85) தந்தை பெரியார் பிறந்த நாள் விழா மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் திரு எஸ். சவுந்திர ராஜன், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு-அ. அருணாசலம் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் சார்பாக, இலங்கைத் தமிழர் நிதிக்கு, ரூ. 3 இலட்சத்திற்கான காசோலையை அந்நிறுவனத் தலைவர் திருமதி ஈ.வெ.கி. சுலோசனா சம்பத் அளித்தார்.





அண்ணா மாவட்டம்-வத்தலக்குண்டு நடுநிலைப்பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் 70 பேர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை (20.10.85) இல்லத்தில் சந்தித்தார்கள். அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், அவர்தம் துணைவியார் திருமதி ஜானகி அம்மையாரும் இனிப்புடன் காலை விருந்தளித்தனர். வந்திருந்தோரனைவரும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிபூரண நலத்துடன் இருப்பதற்காகப் பிரார்த்தனை கீதம் இசைத்தார்கள்.



# வைக்கம் வீரர்

—'இந்திரன்'

**1924**-ஆம்ஆண்டில் நடந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த போராட்டச் சம்பவம் அது. தந்தை பெரியார் அவர்களுக்கு 'வைக்கம் வீரர்' எனத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களைப் புகழாரம் சூட்டச் செய்த சம்பவமும் கூட.

கேரள மாநிலத்திலே உள்ள வைக்கம் நகரில் உள்ள முக்கியத் தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்கள் நடக்கக் கூடாது என்றொரு கட்டுப்பாடு! அதைத் தகர்த்து, தாமும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் துடித்தார்கள் அப் பகுதியிலிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள். விசாலமான அந்த வைக்கம் வீதிகளிலே அவர்களுக்கு நடக்கும் உரிமை கிட்டச் செய்ய வேண்டுமெனக் கருதி, சத்தியாகிரகம் துவக்கத் தீர்மானித்தார்கள் கேரள காங்கிரசின் முக்கியத் தலைவர்கள்.

விஷயம் அரசுக்கு எட்டவே, ஜார்ஜ் ஜோசப் உட்பட 19 முக்கியப் புள்ளிகள் முன்கூட்டியே எச்சரிக்கையாகக் கைது செய்யப்பட்டனர்.

''பெரிய காரியத்தைத் தொடங்கிவிட்டோம்; அடக்குமுறை பலப்பட்டுவிட்டது; நாங்கள் எல்லோரும் கைதாவோம் என எண்ணவில்லை; தாங்கள் உடனே வைக்கம் வந்து சத்தியாகிரகத்தை ஏற்று நடத்தினால்தான் கேரளத்தின் மானமும் எங்கள் மானமும் மிஞ்சும். உடனே வரவும்'' என சிறைக்குள்ளிருந்த ஜார்ஜ் ஜோசப், குரூர் நீலகண்ட நம்பூதிரி ஆகியோர், ரகசியமாக ஓர் ஆள் மூலம் தந்தை பெரியார் அவர்களுக்குக் கடிதமொன்று அனுப்பினார்கள்.

குளித்தலை அரசியல் மாநாட்டிலிருந்து, அப்படியே மதுரை மாவட்டச் சுற்றுப்பயணம் போய், அங்கே ஏற்பட்ட வயிற்றுக் கடுப்புத் தாளாமல், ஈரோட்டுக்கு வந்து தந்தை பெரியார் அவர்கள் படுக்கையிலிருந்த நேரம் அது. அன்று வருஷப் பிறப்பு வேறு!

இந்த நிலையில் அக்கடிதத்தைக் கண்ணுற்ற அவர்-தனது துணைவியார் நாகம்மையிடம், தான் உடல்நலம் பெற்றுவிட்டதாகப் பொய் கூறிவிட்டு, பெரிதாகவே ஒரு துணி மூட்டை கட்டிக் கொண்டு புறப்பட்டு, மறுநாள் இரண்டு மணிக்கெல்லாம் வைக்கம் போய்ச் சேர்ந்தார். சத்தியாகிரகத்திற்குத் தலைமைப் பொறுப்பேற்றார்.

சத்தியாகிரகத்தில் ஈடுபட்ட தந்தை பெரியார், கோவை அ. அய்யாமுத்து ஆகியோர் கைது செய்யப்பட்டு ஒரு மாத காலம் சிறை வைக்கப்பட்டனர் (22-4-1924).

பிறகு வைக்கம் வந்து நாகம்மையார் அப் போராட்டத்தை முன்னின்று நடத்தினார். ஒரு மாதத்திற்குப் பின் விடுதலை செய்யப்பட்ட தந்தை பெரியாருக்கு 'பிரஷ்ட உத்தரவு' போடப்பட்டது; அதையும் மீறி மறுபடி கைதான அவர், ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு, திருவாங்கூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார் (2..5.1924).

இறுதியில் சத்தியாகிரகம் பெரு வெற்றி பெற்றது; தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வைக்கம் தெருவில் நடக்கும் உரிமை வழங்கப்பட்டது. பெரியாருக்குப் பெரும்புகழ் வந்து சேர்ந்தது.

இந்தியாவிலேயே முதன்முதல் வெற்றிபெற்ற சத்தியாகிரகம் என்ற பெருமையைப் பெற்றது வைக்கம் போராட்டம். அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராயிருந்த தந்தை பெரியார் அவர்கள் இதன்பின் 'வைக்கம் வீரர்' என்று போற்றிப் புகழப்பட்டார்.

கேரள மாநிலத்தில் எர்ணாகுளத்திலிருந்து 32 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் 'வைக்கம்' சுயமரியாதைக்கு வித்திட்ட புனித இடமாகத் திகழுவதாகும்.

தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து முதன்முதல் அறப் போராட்டம் நடத்தப்பட்ட இங்குதான் காந்தியடிகளும், தந்தை பெரியாரும், நாராயண குருவும் ஒரே நேரத்தில் சந்தித்தார்கள். இத்தனைப் பெருமையுடைய வைக்கத்தில்' சத்தியாகிரகப் பள்ளி' நடத்தப்பட்டு வருகிறது.

கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டத்தில், வைக்கம் வட்டத்திலுள்ள நடவிளை கிராமத்தில் 91 செண்ட் அளவில் உள்ள நிலத்தை (ரூ. 6,10,900 மதிப்புடையது) கேரள அரசு நமக்கு இலவசமாக அளிக்கவுள்ளது. அந்த நிலத்தில், தமிழ்நாடு அரசு சார்பில், ரூ.11,50,000 செலவில் தந்தை பெரியார் நினைவு வளாகம் (Periyar Memorial Complex) ஒன்று அமைக்கப்படும்; இந்த வளாகத்தில் தந்தை பெரியார் திருவுருவச்சிலை, நூலகம், குழந்தைகள் பூங்கா, மனமகிழ் திடல் போன்றவைகள் நிறுவப்படவிருக்கின்றன.

இந்த வளாகம் அமைவதை நாம் மட்டுமல்ல

சுயமரியாதை எண்ணங்களையும் சீர்திருத்தக் கருத்துகளையும் ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவரும், அன்று எதிர்ப்புத் தெரிவித்த வைக்கம் வாழ் பெருமக்கள் உட்பட அனைவரும் ஒன்றாக இணைந்து ஆவலுடன் எதிர்நோக்குகின்றனர்.



நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசனில்
தந்தை நேருவுடன் இந்திரா. (1954)



அறிஞர் அண்ணா,
பெருந்தலைவர் காமராஜர்
ஆகியோருடன் (1968)



சட்டப்பேரவையிலும், ராஜாஜி மண்டபத்திலும்
இடம் பெற்றுள்ள பேரறிஞர் அண்ணா
அவர்களின் உருவப்படங்களைத் திறந்து
வைத்தபோது... (1969)

தஞ்சையில் 16.9.84ல் நடைபெற்ற ராஜராஜசோழன் 1000-மாவது ஆண்டு முடிசூட்டு விழாவில் கலந்து கொண்ட போது.





சென்னைக்கு 18.12.1983ல் வருகை தந்தபோது விமான நிலையத்தில்

கல்பாக்கம் அணுமின் நிலையத் தொடக்க விழாவில் (23.7.1983)



## முதல் கூட்டுறவு அங்காடி

முதல் கூட்டுறவு அங்காடி 1834-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அமைக்கப்பட்டது.

அதை அமைத்தவர் வில்லியம் கூப்பர் என்பவர். வடக்கு இங்கிலாந்தில் ரோச்டேல் என்ற சிற்றூரில் அவர் வாழ்ந்தார். 1834ஆம் ஆண்டு அங்கு நெருக்கடி ஏற்பட்டு கம்பிளி வியாபாரம் படுத்துவிட்டது. அப்போது அவர் ஏழெட்டுத் தொழிலாளர்களை ஒன்று சேர்த்து, கூட்டுறவுக் கடை ஒன்றைத் தொடங்கினார், தாங்களே கம்பிளிப் போர்வைகள் தயாரித்து விற்பனை செய்தார். தங்கள் கடையின் வாடிக்கையாளர்களுக்கும் ஆதாயத்தில் பங்கு கொடுத்தார்.

அதன்பின் அதுபோன்ற கூட்டுறவுக் கடைகள் உலகம் எங்கும் பரவின.

ஆதாரம்: 'ராணிமுத்து' 1985 அக்டோபர்.

## நகர்ப்புறக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள்

நகர்ப்புறக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச்சங்கம் நிதியுதவி அளிக்கிறது. இதற்கு வேண்டிய நிதியை இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து இச்சங்கம் கடனாகப் பெறுகிறது. பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர், குறைந்த, நடுத்தர மற்றும் உயர் வருவாய்த் தொகுதியினருக்கு ரூ. 10,000 முதல் ரூ. 60,000 வரை பிரதமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் கடனாக வழங்குகின்றன.

இச்சங்கம் தொடங்கப்பட்ட நாள் முதல் 30-6-'84-வரையில் பிரதமச் சங்கங்கள் அங்கத்தினர்களுக்குக் கடன் வழங்கியதன் மூலம் 52,137 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இச்சங்கம் 1-7-'84-முதல் 31-3-'85 வரை ரூ. 1,811.00 இலட்சத்தை பிரதமச் சங்கங்களுக்குக் கடனாக வழங்கி 5,350 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தினைச் செயல்படுத்த 1984-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆயுள் காப்புறுதிக்கழகம் தலைமைச்சங்கத்திற்கு ரூ. 1100 இலட்சம் கடன் உதவி வழங்கியுள்ளது.

## ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் :

ஆடு வளர்ப்போர் அனைவரையும் ஒன்று சேர்த்து அதிக பட்சப் பலனைப்பெறச் செய்யும் நோக்குடன், பல்வேறு திட்டங்களின் மூலம் இதுவரை 1148 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் ஆடு வளர்ப்புப் பிரிவுகளைச் சொந்தமாக ஏற்படுத்தியுள்ளனர். குடற்புழு நீக்கம் செய்தல், தடுப்பூசிகள் போடுதல் போன்ற நோய் நீக்கப் பணிகள், கால்நடை பராமரிப்புத்துறை விரிவாக்க அலுவலர்களால் அளிக்கப்படுகின்றன.

ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் 39 வேளாண்மை மறுநிதிக் கழகத் திட்டத்தின் கீழும், 432 சங்கங்கள் சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டத்தின் கீழும், 223 சங்கங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும், 4 சங்கங்கள் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், 3 சங்கங்கள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், 447 சங்கங்கள் இதரப் பகுதிகளிலும் ஆக மொத்தம் 1148 சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## தென்னிந்தியாவிலேயே நவீன சுயசேவைப் பிரிவு

'இன்றைய நுகர்வாளர்கள் தாங்கள் வாங்க நினைக்கும் பொருட்களைத் தாங்களே தேர்ந்தெடுக்க விரும்புகிறார்கள். இதற்கென ஒவ்வொரு பொருளையும் தாங்களே எடுத்துப் பார்த்து அவற்றின் தரம், விலை முதலியவற்றை மற்ற பொருட்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து முடிவெடுக்கும் சுதந்திரத்தை அவர்கள் கோருகிறார்கள். இந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்குச் சுயசேவைப் பிரிவுகள் வாய்ப்பளிக்கின்றன. இந்த அடிப்படையில் தமிழகத்தில் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் கவர்ச்சிகரமான சுயசேவைப் பிரிவுகள் அறிமுகப் படுத்தப்பட்டு வருகின்றன. நுகர்வோரிடையே இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. இதன் மூலம் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் வியாபாரம் மிகவும் அதிகரித்துள்ளது. 1985-86-இல் இதுவரை ஆறு இடங்களில் சுயசேவைப் பிரிவுகள் திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. அண்மையில் தென்னிந்தியாவிலேயே பெரிய அளவிலான மிக நவீன சுயசேவைப் பிரிவு சென்னை காமதேனு சிறப்பங்காடியில் 18-10-1985 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் திறந்து வைக்கப் பட்டுள்ளது.'

திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

# கூட்டுறவு குறித்து அறிஞர்கள்



கூட்டுறவில் உறுப்பினர்கள் நேர்மையாக இருக்க வேண்டும். கூட்டுறவின் சிறப்பை நன்கு அறிந்திருக்க வேண்டும். முன்னேற்றம் காணக் குறிப்பிட்ட இலக்கு இருக்க வேண்டும். கூட்டுறவு முயற்சியின் வெற்றிக்கு இதுதான் ரகசியம்.

உறுப்பினர்களின் நாணயத்தைப் பொறுத்துத்தான் கூட்டுறவின் வெற்றி அமைகிறது. இவ்வியக்கம் சங்கங்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல; உறுப்பினர்களின் நேர்மையின் அடிப்படையில் அமைகிறது.

—காந்தியடிகள்



கூட்டுறவோடு, கூட்டுறவியக்கத்தோடு, இந்தியாவைப் பிணைக்க வேண்டும் என்பதே என்னுடைய நோக்கம். அதுவே ஊர்தோறும் அடிப்படைச் செயலாக அமைய வேண்டும். இந்தியாவின் பொது எண்ணமே கூட்டுறவு அணுகுமுறையில் இருக்கவேண்டும்.

நமது உழவர்களை விஞ்ஞான முறையில் வேளாண்மைத் தொழில் செய்ய ஈடுபடுத்த வேண்டும். அதை நாம் எவ்வாறு செய்வது? கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக இதை மிக எளிதாகச் செய்ய முடியும். வேறு அணுகு முறை எதுவும் எனக்குத் தோன்றவில்லை.

—ஜவகர்லால் நேரு



மக்கள் சமூகம் கவலையற்று வாழ ஒழுங்கானமுறை, கூட்டுறவுத் தத்துவ வாழ்க்கை முறையாகும்; இதற்கு மக்கள் தயாராகிவிட வேண்டும்; சுயநலத்தை ஒதுக்கிவைத்துவிட வேண்டும்; பலருடைய நன்மை ஒன்றே கருதி வாழ்வில் இறங்க வேண்டும்.

—தந்தை பெரியார்



நமது பொருளாதார அமைப்பின் எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு முறையானது நன்கு பரவியுள்ளது. பொருள்களின் விலை உயர்வுகளைக் கட்டுப்படுத்திப் பொதுமக்களுக்கு நேர்மையான விலையில் அவர்களின் அவசியத் தேவைகளை வழங்கி உதவும் சிறந்த பணியைக் கூட்டுறவு நிலையங்கள் செவ்வனே நிறைவேற்றி வைக்க முடியும். சிறப்பான வகையில் அவைகளின் அமைப்பு இயங்குவதன் மூலம்தான் இயக்கம் இந்த உயர்ந்த குறிக்கோளை அடைய முடியும். கூட்டுறவுத் துறையானது பலம் பெற்று நல்ல வளம் பெற யாவரும் பாடுபடுவோமாக!

—பேரறிஞர் அண்ணா

# அன்னை இந்திராவின் அமுத மொழிகள்



இந்தியச் சகோதரர்களே! சகோதரிகளே! மகான்கள், தீரர்களின் இரத்தம் உங்கள் நாளங்களில் ஓடுகின்றன. மனத்தளர்வை விட்டு எதிர்காலத்தில் திடநம்பிக்கை கொள்ளுங்கள். போரோ, பஞ்சமோ எந்தச் சங்கடம் வந்தாலும் உறுதியுடன் ஈடுகொடுத்துச் சமாளிப்போம். தேசத்தைக் கைவிடமாட்டோம். தேச பக்தியைச் சொல்லிலும் செயலிலும் பிரதிபலித்தால் நம்மால் ஆகாதது ஏதுமில்லை.

O O O

எல்லாத் துறைகளிலும் நாட்டை முன்னேற்றப் பாதையில் வேகமாகச் செலுத்துவதுதான் தலைசிறந்த பாதுகாப்பு. ஒற்றுமை, கட்டுப்பாடு, ஆக்கச் செயல்களையும், நாட்டு நலனுக்கு உகந்தவை எவை. அவற்றை எப்படிப் போற்றிப் பாதுகாப்பது என்றெல்லாம் ஆய்ந்தோய்ந்து முடிவெடுத்துச் செயல்படல் வேண்டும்.

O O O

சகிப்புத் தன்மையும் கட்டுப்பாடும்தான், ஜனநாயகத்தின் அஸ்திவாரங்கள். உடலுக்கு உணவும் உள்ளத்துக்குக் கல்வியும் எப்படித் தேவையோ, அப்படியே சமுதாயம் சிறப்புடன் முன்னேற, கட்டுப்பாடு தேவை. விவேகத்துடன் சிந்தித்தால்தான் கட்டுப்பாடு வளரும். அதை வெளியிலிருந்து திணிக்க முடியாது. பெரியவர்கள் ஒழுங்குக் கட்டுப்பாட்டுடன் வளர்ந்தால் வருங்காலக் குடிமக்களாகிய சிறுவரிடையேயும் அது வளரும். ஜனநாயக அமைப்பில் சிறப்பான சாதனைகளுக்கு ஒவ்வொருவரும் தமக்குத்தாமே கட்டுத் திட்டங்களை வகுத்துக் கொண்டு சுயநலனுக்குப் பொது நலனைப் பணயம் வைக்காமல் நடந்து கொள்ளுதல் அவசியம்.

O O O

நாமெல்லாரும் இந்நாட்டு மன்னர்கள். ஆனால் மக்கள் குருட்டு நம்பிக்கையைக் கடைப் பிடிப்பவர்களாகவும் பிடிவாதமான பழமை விரும்பிகளாகவும் இருந்தால் நாட்டின் நிர்வாகத்திலும் அரசியலிலும்கூட அதன் விளைவுகள் எதிரொலிக்கும். ஆகவே, நம் மக்களிடையே விஞ்ஞானிகளுள்பட சகல துறையினரிடையேயும் பகுத்தறிந்து ஆராயும் மனப்போக்கைப் பரப்புவது மிக அவசியம். ஆராய்ச்சிக் கூடங்கள், கல்விச் சாலைகள், பணிமனைகளில் மட்டுமன்றி நம் வீடுகள், சந்தைகள், சாவடிகளில் கூட இந்த மனப்போக்கைப் பரப்ப வேண்டும்.

அன்பின் மூலம்தான் துவேஷத்தை அளிக்க முடியும். சில இளைஞர்களுக்கு அன்பைவிட வெறுப்பே இலகுவாக முன் நிற்கிறது. புத்த மகான் கூறியது போல, இரும்பைத் துருப்பிடிக்க விட்டால் அந்தத் துருவே இரும்பை அழித்துவிடும். தீமை எப்போதும் நன்மை பயக்காது. அறிவு வளர்வதற்கேற்ப நம் மனதும் விசாலமாக வேண்டும். ஒரு நாடு தானே சாதிக்கும் ஆற்றலால்தான் அதன் வல்லமையை மதிப்பிட வேண்டும். மற்றவர்களிடமிருந்து கடன் வாங்குவதைக் கொண்டு அல்ல.

O O O

குடும்பக் கட்டுப்பாட்டைப் பரப்புவதைத் தங்கள் மேலான பொறுப்பாக ஏற்று, படித்த பெண்கள் அதற்கு உறுதுணையாயிருக்க வேண்டும்.

O O O

ஒழுக்கக் கோட்பாடுகளை இலக்கியம் அறுதியிட்டுக் கூறுவதில்லை. எவை நலம் தரும், எவை தீமை பயக்கும், அவற்றின் அளவுகள் என்ன என்பவற்றை மதிப்பிடும் ஆற்றலையே நமக்கு இலக்கியம் வழங்குகிறது; ஒழுக்கக் கட்டுக்கோப்பை வலுப்படுத்துகிறது; சீர்தூக்கும் ஆற்றலைப் பெருக்குகிறது; காலத்துக்கேற்ற நடை, உடை, பாவனைகளையும் உருவாக்குகிறது.

O O O

நாட்டில் ஒவ்வொரு பகுதியிலும் வாழும் ஆயிரமாயிரம் பாமர மக்களே இந்தியாவின் உண்மைச் சக்தியாக விளங்குகின்றனர். நாம் எவ்வளவுதான் ஆர்வம் காட்டினாலும், எத்தனையோ காலமாக முற்றி முதிர்ந்துள்ள பிரச்னைகளுக்குத் திடுதிப்பென்று தீர்வுகாண முடியாது. கடினமாக உழைத்துக் கூடிப் பேசி ஆலோசித்து பாமர மக்களும் எல்லா வகுப்பினரும் மனம் உவக்கச் செயல்பட்டால் தான் எதிர்காலம் சிறக்க அடிகோல முடியும்.

O O O

அரும் பொருட்காட்சியகங்களும், நூலகங்களும் அறிவுப் பெட்டகங்களாகும். அவை ஆராய்ச்சிக்குச் சாதனங்கள்; கல்வியைப் பெருக்கும் கருவிகள்.

O O O

மதச்சார்பின்மை, சோஷலிசம், ஜனநாயகம் இவை மூன்றும் இணைந்து செயல்பட்டால்தான் நாடு முன்னேறும். நம் பண்டைய பண்பாடுகள், விடுதலைப் போர், இவற்றின் அடிப்படைகள்-இவையெல்லாம் நம்முடைய எளிய மனத்தை உருக்கு ஆக்கி உள்ளன.

O O O

# பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில்

"நாட்டு மக்கள் நலமுற்று வாழவும், நானிலத்தவர் மேனிலை எய்தவும்' மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அறிவித்த திட்டம் இருபது அம்சத் திட்டம். நாட்டிலேயே மிகச் சிறப்பாக இந்தத் திட்டம் செயல்படுவது தமிழகத்தில்தான் என்று திட்டக்குழுவே பாராட்டியுள்ளது.

புதிய இருபது அம்சத் திட்டத்தில் பாசன வசதியைப் பெருக்குவது முதல் அம்சமாகும். பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் வான்மழையை நம்பி வாழும் ஒரு மாவட்டமாகும். ஒரு சிறு பகுதியைத் தவிர, எஞ்சிய பகுதிகள் அனைத்தும் வானம் பார்த்த பூமியாகும். எனவே, பாசன வசதியைப் பெருக்க வேண்டியது இன்றியமையாதது ஆயிற்று. நடப்பு நிதியாண்டில் 220 எக்டேர் நிலப்பரப்பிற்குப் பாசன வசதியைப் பெருக்கத் திட்டமிட்டு, முதல் ஆறு மாதங்களில் 124 எக்டேர் பரப்பு பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது.

புன்செய்ப் பகுதிகளிலும் பிற நிலப்பரப்புக்களிலும் பயறு வகை உற்பத்தியைப் பெருக்குவது இரண்டாவது அம்சம். மழை பற்றாக்குறை காரணமாக செப்டம்பர் - அக்டோபர் பருவத்தில் அதிகம் இல்லாத பயறுவகை உற்பத்தி டிசம்பர் - ஜனவரி பருவத்தில் கூடும் வாய்ப்பு உள்ளது. 3,500 மெட்ரிக் டன் உற்பத்திக் குறியளவாகும். எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 50.11 சதவீதம் அளவை எட்டியுள்ளது. 17,304 மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி ஆகியுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்படி 7,950 குடும்பங்கள் பயனடைய வேண்டும். 2,489 குடும்பங்கள் முதல் ஆறு மாத காலத்தில் இதன் பயனைப் பெற்றுள்ளன. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்படி 2.15 இலட்சம் ஆள்வினை நாட்கள் வேலைவாய்ப்பு இம் மாவட்டத்தில் இந்த ஆறு மாத காலத்தில் உருவாக்கப்பட்டு, கிராமப்புற மக்கள் வேலை வாய்ப்பு அடைந்து, பயன் பெற்றுள்ளனர். குறியளவு 3.17 இலட்சம் ஆள்வினை நாட்கள். ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்படி 4.20 இலட்சம் ஆள்வினை நாட்கள் வேலை வாய்ப்பு உருவாக்கித் தரவேண்டும். 3.21 இலட்சம் ஆள்வினை நாட்கள் அளவிற்குப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

858 ஆதிதிராவிடக் குடும்பங்கள் நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இம் மாவட்டத்தில் பயனடைந்துள்ளன. பிரச்சனைக் கிராமங்கள் 102-ல் 11 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டு விட்டது. 3,000 பேருக்கு வீட்டு மனைகள் வழங்க வேண்டும் என்பது குறியளவு. இதில் 2614 பேருக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட்டு விட்டன. வீடு கட்டும் உதவியை 137 பேர் அடைந்தார்கள். 193 பம்பு செட்டுகளுக்கு மின்சக்தி வழங்கப்பட வேண்டும் என்பது குறியளவு, 73 பம்புசெட்டுகள் இதுவரை மின்சக்தி பெற்று விட்டன. மழை முன் மாதங்களில் அதிகம் இல்லாததால் மரம் நடும் பணி தாமதமாகத் துவங்கியுள்ளது. 36 இலட்சம் மரக்கன்றுகள் நட வேண்டும் என்பது குறியளவு. சாண எரிவாயுச் சாதனங்கள் 72, இதுவரை நிறுவப்பட்டுள்ளன.

குடும்பநலத் துறையில் ஆறு மாதகாலச் சாதனை 46.96 சதவிகிதமாகும். குறியளவு 11,600 நிரந்தரச் சிகிச்சைசெய்துகொண்டோர் 5,448 பேர். பள்ளியில் மாணவர் சேர்க்கை கூடுதலாக்கி இருக்கிறது. 7784 பேர் புதிதாகச் சேர்க்கப்பட்டு 101 சதவிகிதம் என்னும் சாதனையை இம்மாவட்டம் படைத்துள்ளது. முதியோர் கல்வியில் 93 சதம் என்னும் உயர்நிலையைப் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் எட்டியுள்ளது. 25,303 பேர், முறைசாராக் கல்வி மையங்களில் எழுத்தறிவு பெறுகிறார்கள். குறியளவு 27,300.

தொழில் துறையில் பின்தங்கிய இந்த மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 100 சிறுதொழில்களை புதிதாகத் துவக்க வேண்டும். இதுவரை 43 புதிய சிறுதொழில்கள் துவக்கப்பட்டுள்ளன.

புதிய 20 அம்சத்திட்டம் பின்தங்கிய பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் வளர்ச்சிக்குப்பெருதவியாக இருக்கிறது. கழனிகளில் வளம் பெருக்கித் தொழில் பெருக்க இது உதவும் என்பது மக்களின் நம்பிக்கை.



- மோரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பதுபோல அறிவை வளர்த்துக் கொண்டு பலன் பெற வேண்டும்.
- பாதையிலே கிடக்கிற முள்ளை எடுத்து ஓரத்திலே போட்டாலும் அதுவும் நாட்டுப் பற்றால் செய்யும் செயலாகும்.

—பேரறிஞர் அண்ணா

# தமிழ்நாட்டில் குடியரசுத் துணைத் தலைவர்

## இராணிப்பேட்டை பாரத கனரக மின் தொழிற்சாலை நாட்டுக்கு அர்ப்பணம்

வட ஆர்க்காடு மாவட்டம், இராணிப்பேட்டையிலுள்ள பாரத கனரக மின்தொழிற்சாலை (பெல் நிறுவனம்) முழுமையான உற்பத்தியைத் தொடங்கி விட்டதைத் தொடர்ந்து, இத்தொழிற்சாலையை இந்திய நாட்டுக்கு அர்ப்பணிக்கும் விழாவில் (5-10-85) மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பங்கேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''நாம் மின்சார உற்பத்தியில் அதிகக் கவனம் செலுத்தி, நாட்டில் தொழில் வளர்ச்சியைப் பெருக்கப் பாடுபட வேண்டும். 'நாட்டின் முன்னேற்றத்துக்கும், தொழில் வளர்ச்சிக்கும் மிக முக்கியமான தேவையான மின்சாரத் தேவையைப் பூர்த்திசெய்வதில் 'பெல்' நிறுவனம் பெரும் பங்கு வகிக்கின்றது.

''நமது நாட்டில் இனி நாம் முழுமையாக விவசாயத்தை மட்டும் நம்பியிருக்க முடியாது. வேலைவாய்ப்புப் பெருக அதிக அளவில் தொழில்கள் ஏற்பட வேண்டும். நம் நாட்டவருடைய விஞ்ஞான அறிவும், தொழில் நுட்ப அறிவும், வேறு எந்த நாட்டிற்கும் குறைந்தது அல்ல. நாம் ஆராய்ச்சித்துறையிலும், தொழில் துறையிலும் மேன்மேலும் முன்னேற வேண்டும். நாட்டைத் தொழில் மயமாக்குவதன் மூலம் தான் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் காண முடியும். கிராம மறுமலர்ச்சி காண்பதற்கு இதுவே வழி.''

இராணிப்பேட்டை தொழிற்பேட்டைக்கு **'இந்திரா காந்தி தொழில் வளாகம்'** என மேதகு இந்திய குடியரசுத் துணைத் தலைவர் பெயர் சூட்டினார்.



திருப்பூர் குமரன் திருவுருவச் சிலை

இராணிப்பேட்டையில் மத்திய அரசுக்குச் சொந்தமான பாரத கனரக மின் தொழிற்சாலை (பெல்) 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது. 1982-ஆம் ஆண்டு உற்பத்தியைத் தொடங்கியது. மின்சார உற்பத்திக் கருவிகளுக்குத் தேவையான உதிரி பாகங்கள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. 1982-83 ஆம் ஆண்டு 16 ஆயிரம் டன் உதிரி பாகங்கள் இங்கு தயாரிக்கப்பட்டன. படிப்படியாக உற்பத்தி அதிகரித்தது. இங்கு 57 ஆயிரம் டன் உதிரி பாகங்கள் தயாரிக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டு இருந்தது. அந்தக் குறியீட்டைக் கடந்த மார்ச் மாதம் பெல் தொழிற்சாலை எட்டிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு மத்திய தொழில் அமைச்சர் திரு என். டி. திவாரி, மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன், மாண்புமிகு தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

தமிழகத்தின் பழம்பெரும் விடுதலைப் போராட்ட வீரர்களில் தலைசிறந்தவராகத் திகழ்ந்த தியாகி தீர்த்தகிரியார் நூற்றாண்டு விழா 5-10 85அன்று தருமபுரி நகரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நூற்றாண்டு விழாவினையொட்டி நடைபெற்ற தீர்த்தகிரியார்

திருப்பூர் குமரன் துணைவியாருடன் அமைச்சர் பெருமக்கள்



சிலை திறப்பு விழாவிற்கு மேதகு கேரள ஆளுநர் திரு பா. இராமச்சந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். சிலையைத் திறந்து வைத்து மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் ஆற்றிய உரையின் சுருக்கம் பின்வருமாறு:

''தமிழகத்தின் பழம்பெரும் தியாகிகளில் தலைசிறந்தவராக விளங்கியவர் தியாகி தீர்த்தகிரியார். எப்பொழுதெல்லாம் விடுதலை இயக்கம் நடைபெற்றதோ அப்பொழுதெல்லாம் பலன் கருதாது தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்தான் தியாகி தீர்த்தகிரியார். விடுதலைப் போராட்டங்களின் பொழுது பல்வேறு கட்டங்களில் 8 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். தென்னகத்தைப் பொறுத்தவரையில், விடுதலை வேள்வியில் அர்ப்பணித்துக் கொண்ட பெருந்தலைவர் காமராசர், மூதறிஞர் இராஜாஜி, தீரர் சத்தியமூர்த்தி போன்ற பெரிய தலைவர்களெல்லாம் எவ்வளவோ தியாகங்களைப் புரிந்திருந்தாலும் கூட சுதந்திரத்திற்கு முன்னரே, தியாகி என்ற பட்டத்தைப் பெற்றவர் தியாகி தீர்த்தகிரியார் தான் என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



தியாகி தீர்த்தகிரியாருக்கு சித்த மருத்துவத்தில் நல்ல பாண்டித்யம் உண்டு. சிறைச்சாலையில் இருந்தபொழுது, தியாகிகளுக்கு மட்டுமல்லாது மற்ற குற்றவாளிக் கைதிகளுக்குக் கூட மனிதாபிமானத்தோடு வைத்தியங்கள் செய்திருக்கிறார். ஏன்? இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் ஒரு முறை சிறைக் கண்காணிப்பாளருக்கு வயிற்றுப்போக்கு வந்தபொழுது, தியாகி தீர்த்தகிரியார் சித்த வைத்தியம் செய்து குணப்படுத்தினார்.

சுதந்திரத்திற்குப் பின்னர் கைத்தறி நெசவாளர்களின் முன்னேற்றத்தில் அகில இந்திய அளவில் முக்கிய பங்கு வகித்தார். ஒருமுறை பெருந்தலைவர் காமராசர் முதலமைச்ராக இருந்தபொழுது, தருமபுரி சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளராக நிற்கச் சொல்லி வற்புறுத்தியபொழுது, தனக்கு எப்பதவியும் தேவையில்லை என்று மறுத்துரைத்த மகத்தான தியாகிதான் தீர்த்தகிரியார் எனவே, தன்னலம் கருதாது, உதவி எதையும் எதிர்பார்க்காது, பொதுச் சேவையைத் தனது உயிர் மூச்சாகக் கருதி, தன்னுடைய சொத்து சுகங்களையெல்லாம் இழந்தும், கொள்கைப்பிடிப்போடு வாழ்ந்து மறைந்த பெரியவர் தியாகி தீர்த்தகிரியார்.

6-10-85 காலை 10.00 மணிக்கு மேதகு இந்திய குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் ஈரோட்டிற்கு அருகில் உள்ள சென்னிமலையில் தியாகி திருப்பூர் குமரன் சிலையைத் திறந்து வைத்தார். சிலை திறப்பு விழாவுக்கு மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் தலைமை தாங்கினார்.

குடியரசுத் துணைத் தலைவர் தமது உரையில் குறிப்பிட்டார்:

''காந்தி சத்தியாகிரகம் செய்யும்போது உலகப் பத்திரிகைகள் கிண்டல் செய்தன. ஆனால் அந்த உப்புச் சத்தியாகிரக இயக்கம் வளர்ச்சி பெற்று, நாடு முழுவதும் பரவியதும் உலகப் பத்திரிகைகளும், நிருபர்களும் ஓடி வந்தனர்.'

''கடற்கரையோரமாக உள்ள பகுதியில் உப்பு அள்ள ஆரம்பித்துவிட்டனர். இதனால் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சட்டத்தை ஒடிக்கிறார்களே என்று பத்திரிகைகள் ஆச்சரியப்பட்டன.

''இப்போது உள்ள இளைஞர்கள் சுதந்திரம் ஏதோ தானாக வந்ததாக நினைக்கிறார்கள். எவ்வளவு இன்னல்களுக்கு அப்பால் நாம் இந்த சுதந்திரத்தைப் பெற்றோம்! 1931-ஆம் ஆண்டு குமரன், கொடியைக் காத்தான். குமரன், செய்தது நம்மவர்க்கு எடுத்துக் காட்டாக இருக்கவேண்டும். தேச பக்தி நம்மிடம் இருக்க வேண்டும்.''






# கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதித் திட்டம்

மாநிலம் முழுவதும் 104 கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் மூலமாக கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2,00,000 வீடுகள் கட்டுவதாகத் திட்டமிடப்பட்டது. 1.4.1983 முதல் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தில் கட்டப்படும் வீட்டின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 6,000 ஆகும். இம் மதிப்பீட்டுச் செலவு கீழே குறிப்பிட்டுள்ளவாறு வழங்கப்படுகிறது.

| | ஆதிதிராவிடர்கள் | மற்றவர்கள் |
|---|---|---|
| | ரூ | ரூ |
| கடன் | 3,500 | 4,500 |
| முதலீட்டு மானியம் | 1,000 | — |
| பயன் பெறுவோரது பங்கு | 1,500 | 1,500 |

1980-81-ஆம் ஆண்டு முதல் 1983-84-ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் ரூ. 4,485.11 இலட்சம் கடன் வழங்கி 1,58,516 வீடுகள் கட்டியுள்ளது. இதில் 1,32,151 வீடுகள் ஆதிதிராவிடர்களாலும், 26,365 வீடுகள் மற்றவர்களாலும் கட்டப்பட்டன. 1.4.1984 முதல் 31.3.1985 வரையில் ரூ. 950.91 இலட்சத்தை இச்சங்கம் வழங்கியுள்ளது. மார்ச் மாதம் இறுதி வரை 21,302 வீடுகள் ஆதிதிராவிடர்களாலும், 6,705 வீடுகள் மற்றவர்களாலும், ஆக மொத்தம் 28,007 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. கிராமப்புற வீட்டு வசதித்திட்டத்தினை நிறைவேற்ற தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்துக்கு கடனாக வழங்குவதற்கு 1985-86-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 275 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் முதலீட்டு மற்றும் வட்டி மானியம் வழங்குவதற்காக ரூ. 300 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டில் 5,000 வீடுகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கிராமப்புற ஆதிதிராவிடர்களின் வீட்டு வசதித் தேவைகளை தாட்கோ, தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் கிராமப்புறத்தில் நிலமற்றோரின் வேலைஉத்தரவாதத் திட்டத்தின்கீழ் கவனித்துக்கொள்ளப்படும்.



# முதலிடம் பெறும் வட ஆர்க்காடு மாவட்டம்



**1984-85**ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமரின் புதிய இருபது அம்சத் திட்டத்தைச் செயல்படுத்தியதில், மாநிலத்திலேயே வடஆர்க்காடு மாவட்டம் முதல் இடம்பெற்றுள்ளதைப் பாராட்டி தமிழக அரசு ரூபாய் 10 இலட்சம் ஊக்கத் தொகையும், ரூ. 1,000 மதிப்புள்ள சுழற்கேடயமும் இம்மாவட்டத்திற்கு வழங்கியுள்ளது. மேலும் இத்தகைய அரிய சாதனைக்குக் காரணமாக இருந்தவரான மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இ.எஸ். தானியல் குணாநிதி, இ.ஆ.ப., அவர்களைத் தமிழக அரசு பாராட்டி, பாராட்டு இதழ் வழங்கியுள்ளது. இவ்வாறு, பரிசும் பாராட்டும் வழங்கப்படுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சிறு சேமிப்பு வசூலில்...

1984-85 நிதியாண்டில் 31-3-85 வரை சிறுசேமிப்புவசூல் தொடர்பாக வசூல் செய்யப்பட்ட மாவட்டங்களில் வடார்க்காடு மாவட்டம் முதலிடம் பெற்றமைக்கு மாநில நிதிச் செயலர் திரு. சி. இராமச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார்.

மாவட்டங்களிடையே வசூல் செய்யப்பட்ட சிறுசேமிப்பு தொடர்பாக அரசு சார்பில் ஆய்வு செய்யப்பட்டதில் வடார்க்காடு மாவட்டம் குறியீட்டளவாக ரூ. 430 இலட்சம் என்றும் பின்பு அதனை மாற்றி 599.30 இலட்சமாக அறிவித்ததில் ரூ. 728.82 இலட்சம் வசூல் செய்தது. மாற்றியமைக்கப்பட்ட குறியீட்டளவில் 122சதவீதமென்றும் முதலிலில் கொடுக்கப்பட்டகுறியீட்டளவோடு ஒப்பிடுகையில் 169 சதவீதமாக வடார்க்காடு மாவட்டம் தமிழ்நாட்டில் முதல் இடம் பெற்றுச் சிறப்புப் பெறுகிறது.

## ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு உதவிச் சிறப்புத் திட்டத்தில்...

1984-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள் அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டமே 'ஈட்டுறுதியுடன் இணைந்த ஒய்வு உதவிச் சிறப்புத் திட்டம்' என்பது. இத்திட்டமானது 18 முதல் 58 வயது வரைக்குள்ளான விவசாயத் தொழிலாளர்கள் சிறிய மற்றும் சொற்ப நிலமுள்ள விவசாயிகள், கிராமக் கைவினைஞர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள், வண்டி இழுப்பவர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர் ஆகியோர்களுக்கு ஈட்டுறுதிப் பாதுகாப்பும், ஒய்வுக் காலத்தில் உதவித் தொகையும் அளிக்கும் நோக்கத்துடன்திட்டப் பட்டதாகும்.

இத்திட்டத்தில் உறுப்பினர்கள் திங்கள்தோறும் ரூ. 10செலுத்தி வரவேண்டும். இறப்பு ஏற்பட்டால் ரூ. 5,000 ஈட்டுறுதித் தொகை அவர்களின் நியமனதாரர்களுக்கு இந்திய ஈட்டுறுதிக் கழகம் வழங்கும். அதுவன்றியும் உறுப்பினர்கள் இறக்கும் வரை கட்டிய பங்குத் தொகை, கால அளவிற்கேற்ப அரசால் கணக்கிடப்பட்டு, கூட்டு வட்டியுடன் அளிக்கப்படும். இத்திட்டத்தின் உறுப்பினர் ஒருவருக்கு 58 வயது முடிந்தவுடன் செலுத்தப்பட்ட பங்குத் தொகையின் கால அளவிற்கேற்ப ஒய்வூதியத்தொகை அரசாங்கத்தால் ரூ. 33,500 வரை கொடுக்கப்படும். ஆக உறுப்பினர்கள் இத்திட்டத்தின் மூலம் இரண்டில் ஒரு பயன் அடையும் வாய்ப்புள்ளது. உறுப்பினர்கள் தொடர்ந்து மூன்று மாதங்கட்கு மேல் தவணைத் தொகை செலுத்தத் தவறினால் அவர்கள் இத்திட்டத்தினின்றும் விலக்கப்படுவர்.

இச்சீரிய திட்டத்தின் கீழ் வடார்க்காடு மாவட்டமானது 31-8-85 வரை 1,20,545 உறுப்பினர்களைச் சேர்த்து மாநிலத்திலேயே முதலிடம் வகிக்கிறது.

## வெண்மைப் புரட்சியில்...

வட ஆர்க்காடு மாவட்டம் 1984-85-ல் வேறு எந்த ஆண்டும் இல்லாத வகையில், நாளொன்றுக்கு 1,25,000 லிட்டர் பால் கொள்முதல் செய்து, தமிழகத்திலேயே முதலிடம் பெற்று சாதனை புரிந்துள்ளது.

இந்த மாவட்டத்தில், பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முனைப்புடன் பல திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வட ஆர்க்காடு மாவட்டம் கடந்த மூன்று ஆண்டுகளில் பால் வளத்தில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. இங்கு மொத்தம் 700 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

தற்சமயம் வேலூரில் ஒரு பால் பத நிலையமும், ஆம்பூர், திருவண்ணாமலை ஆகிய இரு இடங்களில் இரண்டு பால் குளிரூட்டும் நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இரண்டாம் பால் பெருக்குத் திட்டத்தில், மேலும் இரு பால் குளிரூட்டும் நிலை



யங்கள் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு அளிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று ரூ. 30 இலட்சம் செலவில் அனக்காவூரில் கட்டப்பட்டு வேலைகள் முடியும் தருவாயில் உள்ளன. இங்கு 50,000 லிட்டர் பால் கொள்முதல்செய்து சென்னைக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. இதைத்தவிர அரக்கோணத்தில் ரூ. 30 இலட்சம் செலவில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் கட்டத்திட்டமிடப்பட்டு அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

வேலூரில் அமைந்துள்ள பால்பத நிலையத்தின் கொள்ளளவு நாளொன்றுக்கு 70,000 லிட்டர். ஆம்பூர், திருவண்ணாமலை ஆகிய இரு பால் குளிரூட்டும் நிலையங்களின் கொள்ளளவு நான் ஒன்றுக்கு 30,000 லிட்டர். ஆம்பூரிலுள்ள குளிரூட்டும் நிலையத்தில் சூரிய வெப்பக் கொதிநீர் திட்டம் (solar hot Water system) துவங்கப்பட்டுச் செயல்பட்டு வருவதால் மின்சாரத்தைச் சேமிக்க இத்திட்டம் மிகவும் உதவியாக உள்ளது.

கூட்டுறவு முறையில் பால் சேகரமும் விநியோகமும் செய்தல், கறவை மாடுகளில் பால் தரும் திறனை அதிகரிக்கச் செய்தல்; நியாய விலையில் சுகாதாரமான பாலை நகர மக்களுக்கு விநியோகம் செய்தல் ஆகிய மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு 'ஆனந்த்' பாணியிலான கூட்டுறவு இயக்கம் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் 1985-86-ல் புதிதாக 100 கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 16,500 புதிய உறுப்பினர்களைச் சேர்க்க முடியும். 18,100 கறவைமாடுகள் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாம் பால்பெருக்குத் திட்ட இறுதிக்குள் இம்மாவட்டத்தில் செயல்படும் சங்கங்கள் மூலமாக பால் உற்பத்தியை நாள் ஒன்றுக்கு 2,00,000 லிட்டராக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

விஞ்ஞான முறையில் இனவிருத்திப் பணிகளைச் செயல்படுத்துவதில் வட ஆர்க்காடு மாவட்டம், இந்தியாவிலேயே குஜராத்துக்கு அடுத்து இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இம்மாவட்டத்தில் செயற்கைமுறைக் கருவூட்டல் வசதிபெற்றுள்ள சங்கங்கள் 275 உள்ளன. தரமான, கறவை மாட்டுக் கன்றுகளை உருவாக்க 1985-86-ல் 1200 மெட்ரிக் டன் தீவனம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டு தரமான 1000 கன்றுகளை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முதல் சென்னை, மதுரை மாநகரில் நடைமுறையில் உள்ளது போல், பாலிதீன் பைகளில் பதப்படுத்தி நிலைப்படுத்திய பால் ½ லிட்டர், ¼ லிட்டர் என்ற அளவில்வேலூர் நகரில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த முறைப்படி வேலூர் நகரில் மட்டும் 6,000 லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. இம்முறை இராணிப்பேட்டை, ஆர்க்காடு, வாலாஜா ஆகிய இடங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு வாராவாரம் கணக்குகளைச் சரி பார்த்துப் பணத்தினைக் கொடுக்கும் வகையில் நவீன முறையில் கம்ப்யூட்டர் மூலம் விரைவுபடுத்தப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திலேயே ரூ. 40 ஆயிரம் செலவில் மினி கம்ப்யூட்டர் ஒன்றை நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியில் வட ஆர்க்காடு மாவட்டம் எதிர்காலத்தில் உன்னத இடத்தைப் பெற்று வரலாறு படைக்கும் என்பதில் ஐயம் இல்லை!



விளையும் பயிர் :

## வளரும் எழுத்தாளர்கள் வாழ்க!



**எம். முகம்மது அனீஸ்,**
மேனிலை இரண்டாமாண்டு,
பகுர்தீன் அரசு மேனிலைப் பள்ளி
பனைக்குளம்,
இராமநாதபுரம் மாவட்டம்.



**கே. ஆர். மணிவண்ணன்,**
ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேனிலைப் பள்ளி,
மேற்கு மாம்பலம்,
சென்னை-600 033.



**என். மகேந்திரன்,**
கோவை மருத்துவக் கல்லூரி,
கோயம்புத்தூர்.

படிப்போடு நின்று விடாமல், கதை, கட்டுரை, கவிதை எழுதுவதிலும், நாடகம், பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றும் பாராட்டுதல்கள் பெற்ற இம்மாணவர்களை நாமும் பாராட்டுவோம்!

**மாணவர் பக்கம்**

## பொது அறிவுத் துணுக்குகள்

இருதயத்திலுள்ள வால்வுகள் சிறப்புத் தன்மை மிக்க பாப்பிலரி (Papillary) என்ற தசைகளாலானவை. இவை அதிக வேலையின் காரணமாக வலுவிழந்து போகாத தன்மையுடையவை. இருதயம் தொடர்ந்து இயங்க இதுவே காரணம்.

* மனிதமூளையிலிருந்து பன்னிரெண்டு இணை நரம்புகள் உடலின் பல்வேறு இயக்கங்களைக் கட்டுப்படுத்துகின்றன.

* நமது கண்கள் வெளிச்சத்தைப் பார்க்கும்போது ரசாயனக் கிரியை நடந்து டிரான்ஸ்ரெடினின் என்ற பொருள் உண்டாகும். இருட்டினைப் பார்க்கும்போது, 'ரொடாப்சின்' என்ற பொருள் உண்டாகும். வெளிச்சத்திலிருந்து திடீரென இருளுக்குள் நாம் நுழைந்தால் கண் தெரிய சிறிது நேரமாகிறது. இதற்கு இந்தக் கிரியைகளே காரணம்.

* நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே நீண்ட நேரம் தூங்கினால் கைகளிலுள்ள நரம்புகளின் அழுத்தம் காரணமாக கை உணர்ச்சியற்றுப்போய்விடும்.

**ச. சிவப்பிரபாகரன்**
இரண்டாமாண்டு எம்.பி.பி எஸ்,
தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி,



## பழக்கத்தால் சிறப்புப் பெற்றிடலாம்!

மாங்கொல்லைச் சிட்டுக்களே!—நல்ல
மல்லிகை மொட்டுக்களே!
பூங்கொல்லை மணக்கும் சிறப்பு—போல,
புத்தியைத் தந்திடும் படிப்பு!

தத்துவப் பாரதி, காந்தி—வழியில்
சித்திரமாய் இருப்பதே சாந்தி!
முத்தமிழ் வாழ்விக்கும் நம்மை—எதையும்
முறையோடு கற்பதே நன்மை!

சத்தியம் வாழ்வின் சுதந்திரம்—நல்ல
சமத்துவம் வாழ்வின் நிரந்தரம்!
சக்தியும் நிலைத்திட முயற்சி—நாளும்
தயங்காமற் செய்யணும் பயிற்சி!

அன்பால் உலகை வென்றிடலாம்—நமது
அறிவால் வரலாறு படைத்திடலாம்!
பண்பால் நிலைத்து வாழ்ந்திடலாம்—நல்ல
பழக்கத்தால் சிறப்புப்பெற்றிடலாம்!

—அழக பாண்டியன்

# நோபல் பரிசு!

உலகில் மிக உயர்ந்த பரிசாகக் கருதப் படும் நோபல் பரிசு ஆண்டுதோறும் வழங்கப் படுகிறது.

1985ஆம் ஆண்டுக்கான பௌதிகவியல் நோபல் பரிசு மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த விஞ்ஞானி பேராசிரியர் கிளாஸ் வான் கிளிட் ஸிங் பெறுகிறார். எலக்ட்ரானிக்ஸ் துறையில் செமிகண்டக்டர் தொழிலுக்கு மிகவும் பயன் படும் ''ஹால் எபக்ட்'' கண்டுபிடிப்புக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. 42 வயதான கிளிட்ஸிங் தற்போது மாக்ஸ் ப்ளாங்க் ஆய்வு நிலையத்தில் பேராசிரியராக உள்ளார்.

இரசாயனத் துறையிலான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சி யாளர்களான ஹெர்பர்ட் ஹாப்ட்மான், ஜெரோமேகார்லே ஆகிய இருவருக்கும் வழங் கப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் நோபல் பரிசுக்கான 2 இலட்சத்து 25 ஆயிரம் டாலர் தொகையைப் பகிர்ந்து கொள்வர்.

இரசாயனத் துறையில் அணுமூலக் கூறு களின் கட்டமைப்பைக் கண்டறிவதற்கான கருவிகளை உருவாக்குவதில் இவர்கள் பங் களித்துள்ளனர். பேராசிரியர் ஹாப்ட்மான் (வயது 68), பேராசிரியர் கார்லே (67) ஆகிய இருவருமே ஆசிரியர்களாகப் பணியாற்றுகின் றனர்.

இலக்கியத்துறைக்கு என வழங்கப்படும் நோபல் பரிசு பிரெஞ்சு நாவலாசிரியர் கிளாடி சைமனுக்குக் கிடைத்துள்ளது.

72 வயது நிரம்பிய சைமன், 1941ஆம் ஆண்டில் எழுதத் துவங்கினார். இதுவரை 13 நாவல்கள் எழுதியுள்ளார்.



# அது என்ன பெயர்?

இந்திய நாட்டு நாணயம் 'ரூபாய்' என்றழைக்கப்படுகிறது. அதைப் போல உலகநாடுகள் எப்படி அழைக்கின்றன?

கியூபா—பிஸோ
பிலிப்பைன்ஸ்—பெஸோ
இந்தியா,
பாகிஸ்தான்,
இலங்கை, நேபாளம்—ரூபாய்
இங்கிலாந்து,
லெபனான், எகிப்து—பௌண்ட்
ஜெர்மனி—மார்க்
ஸ்பெயின்—பெஸாடோ
ரஷ்யா—ரூபிள்
ஜப்பான்—யென்
இத்தாலி—லிரா
டச்சு—ஷில்டர்
டென்மார்க்—குரோவா
கென்யா, உகாண்டா—ஷில்லங்
பெல்ஜியம், பிரான்சு
சுவிட்சர்லாந்து—பிராங்
ஈரான், ஓமன், கத்தார்
சவுதி அரேபியா—றியால்
அமெரிக்கா, கனடா,
ஹாங்காங், மலேசியா
நியூசிலாந்து, சிங்கப்பூர்—டாலர்
குவைத், பஹறைன்,
லிபியா, ஈராக்,
யூகோஸ்லோவேகியா—தினார்
பர்மா—கியாத்
வங்காளதேசம்—டாகா
கிரீஸ்—டிராசமா
போர்ச்சுக்கல்—எங்குடோ
வியட்நாம்—டோங்
தென்ஆப்பிரிக்கா—ரேண்ட்
தாய்லாந்து—பாட்

—ஆர். ஆர். ரங்கராசன்

மேனிலை இரண்டாமாண்டு
எஸ்.எஸ்.வி. மேனிலைப்பள்ளி
ஏகாம்பரேஸ்வர அக்ரகாரம்
சென்னை-600003.





# இது உங்கள் பக்கம்!

மாணவ மணிகளே!

இது உங்கள் பக்கம்.

இப்பகுதியில் நீங்கள் கதை, கட்டுரை கவிதைகள், பொது அறிவுத் துணுக்குகள் முதலானவை எழுதி அனுப்பலாம். ஆனால் அவை உங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். பொது அறிவுத் துணுக்குகளுக்கு ஆதாரம் இருத்தல் வேண்டும். கல்வியோடு பிற துறைகளில் திறமையுள்ள மாணவ, மாணவிகள் தங்களைப் பற்றிய குறிப்புடன் 'பாஸ்போர்ட்' அளவு புகைப்படத்தையும் அனுப்பி வைக்கலாம். அத்துடன் ஆசிரியரின் கையொப்பமும் அந்தக் குறிப்பில் இருத்தல் வேண்டும்.

—ஆசிரியர்.

மேதகு குடியரசுத் தலைவர் உதகையில் 11.9.85ல் கண்டு மகிழ்ந்த கோத்தர் இன மக்களின் பாரம்பரிய நடனம்.





உதகையில் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் 10.9.85 அன்று திறந்து வைக்கப்பட்ட ரூ. 3 கோடி செலவில் உருவான நவீன பாலாடை, பால்வளத் தொழிற்சாலை.

உதகமண்டலத்தில் இந்துஸ்தான் புகைப்பட நிறுவனத்தை மேதகு குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில் சிங் அவர்கள் 13.9.85 அன்று பார்வையிட்டார்.



# லைப்பாய் இருக்குமிடம்... அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!




போராடிப் பொழுதெல்லாம்
உழைத்தபின்...ஜோராக ஆடிய பின்,
நீராடுவீர் லைப்பாய் கொண்டு...குளித்த
உடம்பிலே குலவக் காண்பீர் சுத்தமே
உருவான ஆரோக்கிய மலர்ச்சி!

## லைப்பாய்

அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது

LINTAS L 95 2317 TM.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு



# தமிழ்நாட்டில் கூட்டுறவு விற்பனைகள்

எளிமையான கூட்டுறவுக் கடன் வசதியிலிருந்து விவசாயிகளுக்குக் கிடைக்கும்பயன்களைத் திறமையான விற்பனை உதவி வாயிலாக வலுப்படுத்தி அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் மகத்தான பொறுப்பு கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. திறன்வாய்ந்த கூட்டுறவு விற்பனையைப் பெருமளவில் விரிவுபடுத்துவதால் உற்பத்தியாளர்களின் நலன்கள் பாதுகாப்பதுடன் தேவையற்ற இடைநிலையாளர்களைத் தவிர்ப்பதன் மூலம் நுகர்வோரின் நலன்களும் காக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில், தஞ்சாவூர் மாவட்டம் நீங்கலாக, கூட்டுறவு விற்பனை ஈரடுக்குக் கொண்டதாகும். தாலூகா அளவில் 114 பிரதம கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் அமைந்துள்ளன. தஞ்சை மாவட்டத்தில் மாவட்ட அளவிலான ஒரு கூட்டுறவு விற்பனை இணையம் உள்ளது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ஏறத்தாழ விற்பனை செய்வதற்கான சந்தை உள்ள அனைத்து இடங்களிலும் அமைந்துள்ளன.

பிரதம கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் விவசாயிகளும், வேளாண் சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும் உறுப்பினர்களாக உள்ளனர். 31.3.85ல் இச் சங்கங்களில் 10,27,653 உறுப்பினர்கள் இருந்தனர்.

> சமுதாயத்தில் தனி உடைமைக்கும் பொது உடைமைக்கும் மையமான ஒரு தங்கு மிடமாக உருவாகியிருப்பதே கூட்டுறவு இயக்கம்.
>
> —பேரறிஞர் அண்ணா

தம் உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்து தருதலே இச் சங்கங்களின் முதன்மையான நோக்கமாகும். வேளாண் இடு பொருட்களை வழங்குதல், நல்ல விலை கிடைக்கும்வரை காத்திருக்க உதவியாக 'விளைபொருளீட்டுக்கடன், வழங்குதல், விற்பனை மூலம் பயிர்க் கடன்களை வசூலித்தல் ஆகிய பணிகளையும் இச்சங்கங்கள் மேற்கொள்ளுகின்றன.

நடப்பு ஆண்டில் ரூ.85 கோடி மதிப்புள்ள வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 30.9.85 வரையிலான காலத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ. 39 கோடி மதிப்புள்ள வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்துள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் விற்பனைப் பணிகளை விரிவுபடுத்தத் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் நிதியுதவி வழங்கி வருகிறது. 1980-81, 1981-82, 1982-83 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ. 40 இலட்சம், ரூ. 50 இலட்சம், ரூ. 95 இலட்சம் இணையத்திற்கு வழங்கப்பட்டது. இத் தலைமை இணையம் அதன் விற்பனைப் பணியை பிரதமச் சங்கங்கள் வழியாகச் செயல்படுத்தி வருகிறது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுடனும், 17 கூட்டுறவு நூற்பாலைகள், தேசிய பஞ்சாலைக் கழகம், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் ஆகியவற்றுடனும் இணையம் இணைக்க ஏற்பாடு செய்து நூற்பாலைகளின் தேவைக்கான பருத்தியைக் கொள் முதல் செய்து, அதனை பஞ்சாக மாற்றி அவ்வாலைகளுக்கு விற்பனை செய்து வருகிறது.

1984-85ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து ரூ. 9 கோடி, ஆந்திராவிலிருந்து ரூ. 6 கோடி, கர்நாடகத்திலிருந்து ரூ. 4 கோடி மதிப்புள்ள பருத்தி கொள்முதல் செய்யப்பட்டது.

தமிழ்நாடெங்கிலும் காய்கறி பயிரிடும் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளைக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு சங்கம் வீதம் பெரும்பாலான மாவட்டங்களிலும், ஒரு ஒன்றியத்திற்கு இரண்டிற்கு மேற்பட்ட சங்கங்கள் வீதம் ஒரு சில மாவட்டங்களிலும் மொத்தம் 516 காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களில் 31.8.85 அன்று 34,466 பேர் உறுப்பினர்களாக இருந்தனர். இவர்களுள் 25,866 பேர் சிறு விவசாயிகளாவர். இச் சங்கங்களின் எல்லையுள் செயல்பட்டுவரும் 57,697 சத்துணவு மையங்களில் 39,592 சத்துணவு மையங்களுக்கு இச் சங்கங்கள் காய்கறி வழங்கி வருகின்றன. 31.3.85 உடன் முடிந்த ஆண்டில் இச் சங்கங்கள் ரூ. 4.05 கோடி மதிப்புள்ள காய்கறிகளை விற்பனை செய்தன. இவற்றுள் ரூ. 3.42 கோடி மதிப்புள்ள காய்கறிகள் சத்துணவு மையங்களுக்கு வழங்கப்பட்டவையாகும்.

கூட்டுறவு விற்பனை நிறுவனங்களின் பணியாளர்களின் தன்மையை மேம்படுத்தும் நோக்குடன் சென்னை நடேசன் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியிலும், பெங்களூர் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியிலும், புனேயிலுள்ள வைகுந்த மேதா தேசிய கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிறுவனத்திலும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.. கூட்டுறவு விற்பனையின் பயன்களை விளக்கும் வகையில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தேவையான விளம்பரம் செய்து வருகிறது.

**அ. கனகசபாபதி**
கூடுதல் பதிவாளர்
(விற்பனைத் திட்டம் மற்றும் வளர்ச்சி)



# ஓரே மேடையில் நான்கு விழாக்கள்

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவை நனவாக்குகின்ற வகையிலே, இன்று தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அந்த வகையில், சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதி, சிவசண்முகபுரம் பகுதியில், ஏழை எளியவர்களுக்கான 48 குடியிருப்புகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் திறந்து வைத்தார்.

18-10-85 அன்று மாலை சென்னை ஆபட்ஸ்பரி மாளிகையில் நடந்த சீர்மிகு விழாவில், ஒரேமேடையில் நான்குவிழாக்கள் தொடங்கி வைக்கப்பட்டன.

காமதேனு கூட்டுறவுச் சிறப்பங்காடிக் கட்டடத் தொடக்க விழா - தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூட்டுறவு வளாகக் கட்டட அடிக்கல்நாட்டு விழா- 464 மாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின் முதற்கட்டக் குடியிருப்புகள் திறப்பு விழா- சுயசேவைப் பிரிவு தொடக்க விழா ஆகியவற்றை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கி வைத்தார்.

முன்னதாக, மாண்புமிகுமுதல்வர் அவர்கள், புதிதாகக் கட்டப்பட்டுள்ள காமதேனு கூட்டுறவுச் சிறப்பங்காடிக் கட்டடத்தையும், அதில் அமைந்துள்ள நவீன சுய சேவைப் பிரிவையும் சுற்றிப் பார்த்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது தீப் பிடிக்காத வீடுகள் கட்டும் திட்டத்தைக் கொண்டு வந்தார். அப்போது தேனாம்பேட்டை சிவசண்முகபுரம் திட்டப்பகுதியில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்குப் பதிலாக 451 தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டிக் கொடுக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1969 ல் நன்கொடையாக ரூ.1இலட்சம் 'எங்கள் தங்கம்' திரைப்படத்தில் நடித்த தொகையில் இருந்து வழங்கினார்.

தற்கால நாகரிகத்துக்கு ஏற்ப நவீன வசதியுடன் கூடியதாக இந்தவீடுகளைக்கட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் 348 அடுக்கு மாடிவீடுகள் மத்திய வீட்டு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் 73 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இப்பகுதியில் கட்ட ஆரம்பிக்கப்பட்டது.

இப்போது 48 குடியிருப்புகள் ஒதுக்கீட்டுக்குத் தயாராக உள்ளன. மீதமுள்ள குடியிருப்புகள் இரண்டு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்படும். தற்போது கட்டப்படுகிற மூன்று அடுக்கு மாடிக் குடியிருப்புகளில்

இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி.

நான்காவது மாடியும் கட்டிக் கொள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி இப் பகுதியில் 464 குடியிருப்புகள் ரூ. 1 கோடி செலவில் கட்டி முடிக் கப்படும்.

சிவசண்முகபுர்ம் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு மற்றும் கட்டப்பட விருக்கும் குடியிருப்புப் பகுதிக் கும் சேர்த்து **'எம்.கே. ராதா நகர்'** என்ற பெயரை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் சூட்டினார்.

முன்பெல்லாம் கூட்டுறவுக் கடைகளுக்குப் போட்டி இல்லா மல் இருந்தது. வளர்ந்து வரும் நாகரிகத்துக்கு ஏற்ப இப்போது தனியார் துறையோடு போட்டி போடும் கால கட்டத்தில் கூட்டு றவு இருக்கிறது. இதைஉணர்ந்து தான் மாவட்டத் தலைநகர்களில் நுகர்வோர் சுயசேவைப் பிரிவு களை ஆரம்பிக்க வேண்டும்என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அதன் அடிப்படையில்தான், சுயசேவைப் பிரிவு தொடங்கப்பட்டிருக்கிறது. நுகர்வோர் பிரிவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

சிவசண்முகபுரத்தில் திறக் கப்பட்டுள்ள ஒவ்வொரு குடி யிருப்பும் 171 சதுர அடி பரப் பளவு உள்ளதாய் இருக்கும். இதற்காகும் செலவு ரூ. 21,150 ஆகும். ஒதுக்கீடுதாரர்களிட மிருந்து ரூ. 22 மாத உரிமைத் தொகையாக வசூலிக்கப்படும். தவணைமுறைத் திட்டத்தின்கீழ் குடியிருப்புப் பெற விரும்புவோர் ரூ. 30, ரூ. 35, ரூ. 40 என்ற முறையில், மாதத் தவணைத் தொகை 25 ஆண்டுகளுக்குச் செலுத்திக் குடியிருப்புகளைச் சொந்தமாக்கிக் கொள்ளலாம்.

> "கூட்டுறவு என்பது மனிதனுக்கு மனிதன் தகுதியை உணர்வது மட்டுமலல; தரத்தை மட்டுமல்ல, அவர்களை மதிக்கக்கூடிய பணியைப் பெறுவது மட்டுமலல; தங்களுக்கு முடிவதைப் பிறர் இயலாமையை எண்ணி அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய அந்த எண்ணம் கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படையான மூலதனம்"-
>
> **— மாண்புமிகு முதல்வர்**
> **டாக்டர் எம்.ஜி.ஆர்**

காமதேனு கூட்டுறவுச் சிறப் பங்காடியின் புதிய கட்டடம் ரூ. 77 இலட்சம் மதிப்பீட்டுச் செல வில் கட்டப்பட்டுள்ளது. காம தேனுவில் ஏற்கெனவே செயல் பட்டு வந்த சுயசேவைப் பிரிவு விரிவுபடுத்தப்பட்டு, தென் இந்தி யாவிலேயே மிகப் பெரிய நவீன சுயசேவைப் பிரிவாகப் புதிய கட்டடத்தில் தொடங்கப்பட் டுள்ளது.

**2ஆம் அட்டையில்...**

காமதேனு கூட்டுறவுச் சிறப்பங்காடி கட்டடத் திறப்பு விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள், நினைவுக் கேடயத்தினை வழங்குகிறார்.

வாடகைக் கட்டடத்தில் 2,700 சதுர அடிப் பரப்பளவில் 1,200 பொருள்களுடன் இயங்கி வந்த சுயசேவைப் பிரிவு, தற் போது 8000 சதுர அடிப் பரப் பளவில், 2,500 பொருள்கள் விற் பனையுடன் செயல்படத் தொடங்கியுள்ளது.

**மராட்டிய மாநிலத்துக்கு அடுத்த படியாக, தமிழகத்தில்தான் இத் தகைய நவீன சுயசேவைப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.**

இந்தச் சீர்மிகு விழாவில், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ண சாமி அவர்கள், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு என். நல்லுசாமி அவர்கள் மற்றும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர் திரு என்.வி.என். செல்வம், திரு ஜேப்பியார், எம். எல். சி., திரு இ. மதுசூதனன் எம்.எல்.சி. ஆகி யோர் கலந்து கொண்டனர்.

**—பி. வி. கிரி**





தமிழகத்தைப் பொறுத்தவரை 1981 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 5.2 இலட்சம் பழங்குடியினர் உள்ளனர். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.1 சதவீதமாகும். இப்பழங்குடியினரில் 25 சதம் பேர் சேலம் மாவட்டத்திலும் 50 சதம் பேர் வடார்க்காடு, தென்னார்க்காடு, தர்மபுரி, திருச்சி, நீலகிரி மாவட்டங்களிலுள்ள மலைப் பகுதிக் கிராமங்களிலும் வாழ்கின்றனர். இப்பகுதிகள் தொலைவானதொடர்பில்லாத இடங்களில் அமைந்துள்ளமையால் கல்வி, விற்பனை

ஏர்க்காடு, கொல்லிமலை ஆகிய இரு பழங்குடியினர் மேம்பாட்டு வட்டாரங்கள் ஐம்பதுகளின் தொடக்கத்தில் கண்டறியப்பட்டன. இங்கு 1971 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 40,000க்கு மேற்பட்ட பழங்குடியினர் வாழ்ந்தனர். நான்காம் திட்ட இறுதியில், பழங்குடியினர் நலத் திட்டங்களின் கீழ் பயனடையும் பழங்குடியினரின் எண்ணிக்கையை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. ஐந்தாம் திட்டம் நடைமுறைக்கு வந்த போது குறைந்தபட்சம் 10,000

தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் கொல்லிமலை, ஏர்க்காடு, கல்ராயன்மலை, அரனூத்துமலை, பச்சைமலை ஆகிய ஐந்து பகுதிகளும், வடார்க்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலைப் பகுதியும், தென்னார்க்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலைப் பகுதியும், தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி மலையும், திருச்சி மாவட்டத்தில் பச்சை மலையும் ஆக ஒன்பது பகுதிகள் தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளாகக் கண்டறியப்பட்டவையாகும்.

# மூத்த குடிகள் முன்னேற..

வசதி, கடன் வசதி ஆகியவை இம்மக்களுக்கு எளிதில் கிடைக்க வாய்ப்பில்லாமலிருந்தது. இதனால், ஏழ்மை, கல்வியின்மை, கடன் சுமை ஆகிய பாதிப்புகளுக்கு இவர்கள் இலக்கானார்கள். இவர்கள் தம் வருமானத்துக்கு வேளாண்மையையே முதன்மையாக நம்பியுள்ளனர். இதிலும், மற்ற துணைத் தொழில்களிலும் முன்னேறிய முறைகளைப் பின்பற்ற முடியாமல், அவர்களை ஏழ்மையும் கல்வியின்மையும் தடுத்து வந்தன.

மொத்த மக்கள் தொகையும், அவர்களுள் 50 சதம் பழங்குடியினரும் உள்ள பகுதிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளாக வரையறுக்கப்பட்டன. பல்வேறு மேம்பாட்டுத் துறைகளும் இப்பகுதிகளுக்கெனப் பழங்குடியினர் துணைத் திட்டங்களை ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் வகுக்கலாயின.

**ஆர். சந்தானம், இ.ஆ.ப.**
**கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்.**

பழங்குடியினரிடமிருந்து வளப் பொருட்களை நல்ல விலை கொடுத்துக் கொள்முதல் செய்வதும், வேளாண்மையில் ஈடுபட்டுள்ள பழங்குடியினருக்கு வேளாண்மைக் கடன், இடுபொருட்கள் ஆகியவற்றை வழங்கி அவர்களிடமிருந்து உபரி விளைபொருட்களைக் கொள்முதல் செய்வதும், அவர்களுக்குக் குடும்ப செலவுக்கும், திருமணம் போன்ற விசேஷ நிகழ்ச்சிகளுக்கும் தேவைப்படும் நுகர்வுக்கடன் வழங்குவதும், அவர்களுக்குத் தேவையான நுகர்பொருட்களை

வினியோகிப்பதும் இப்பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளாக அமைந்தன. இதனால், பழங்குடியினருக்கு ஒரே இடத்தில் கடன், விற்பனை, வினியோகம் உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் ஒருங்கிணைந்த முறையில் கிடைக்கின்றன. மேற்குறித்த, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 12 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், அப்பகுதிகளைச் சேராத நீலகிரி மாவட்டத்தில் முதுகுடிகள் திட்டத்தின் கீழ் பழங்குடியினர் நலனுக்கென ஒரு பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் ஆக மொத்தம் 13 சங்கங்கள் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

பழங்குடியினரின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்கள் இச்சங்கங்களில் சேர்வதற்காகவும், கடன் வசதி பெறுவதற்காகவும் தேவையான அளவு பங்குத் தொகை செலுத்துவதற்கென அரசே அவர்களுக்கு ரூ. 50 முதல் ரூ. 200 வரை உதவி தந்து வருகிறது. தற்போது இச்சங்கங்களில் 32,451 பழங்குடிக் குடும்பங்களிலிருந்து உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். இச்சங்கங்களின் மூலதனத்துக்கென அரசு சங்கம் ஒன்றிற்கு ரூ. 50,000 வீதம் தந்துள்ளது. 31-3-85இல் இச்சங்கங்களிடம் ரூ. 53.87 இலட்சம் பங்கு மூலதனம் இருந்தது.

பழங்குடியினரில் பெரும் பாலோர் வேளாண்மையையே தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான பயிர்க்கடனைப் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அளிக்கின்றன. அவர்களது வருமானத்தைப் பெருக்கும் நோக்குடன், பால் பண்ணைத்தொழில் முதலியவற்றை மேற்கொள்ள மத்திய காலக் கடன்களையும் வழங்குகின்றன. பருவமல்லாத காலங்களில் பழங்குடியினரின் தேவைகளை நிறைவு செய்யவும், திருமணம், மருத்துவ சிகிச்சை முதலிய செலவுகளுக்காகவும் நுகர்வுக் கடன்களையும் வழங்குகின்றன. இக்கடன்கள் அனைத்தும் ஆண்டுக்கு 4 சதம் என்ற குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படுகின்றன. வழக்கமான வட்டி விகிதத்துக்கும் இந்தக் குறைந்த விகிதத்துக்கும் இடையிலான வித்தியாசத்தை அரசு மானியமாக வழங்குகிறது. 1984-85இல் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பழங்குடி உறுப்பினருக்கு ரூ. 76.17 இலட்சம் அளவுக்குக் கடன் வழங்கியுள்ளன.

> வாடித் தொழிலின்றி வறுமையால் சாவதெல்லாம்
> கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் தோழர்களே!
>
> —புரட்சிக் கவிஞர்

1984-85இல் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தம் உறுப்பினர்களிடமிருந்து ரூ. 5.28 இலட்சம் மதிப்புள்ள பழங்கள், புன்செய்த் தானியங்கள் முதலிய வேளாண் விளை பொருட்களைக் கொள்முதல் செய்துள்ளன.

பழங்குடியினரின் சொந்த நிலங்களில் விளையும் சிறு வனப் பொருட்களை விற்பனை செய்ய உதவுவதுடன், வனப்பகுதிகளிலிருந்து சிறு வனப் பொருட்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டுக் கூடுதலான வருமானம் ஈட்டவும், அவர்களுக்குப் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உதவுகின்றன.

1984-85-ல் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 14.38 இலட்சம் மதிப்புள்ள கடுக்காய், புளி, சீயக்காய், தேன் முதலிய சிறு வனப் பொருட்களைச் சேகரித்தன. இவ்வியாபாரத்தில் சங்கங்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களை ஈடு செய்து கொள்ள உதவும் வகையில் இச்சங்கங்களின் விலை ஏற்றத்தாழ்வு நிதிக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது.

இச் சங்கங்கள் பழங்குடியினருக்கு வேளாண் இடுபொருட்களையும் வழங்கி வருகின்றன.

1984-85-ல் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 17.92 இலட்சம் மதிப்புள்ள வேளாண் இடுபொருட்களைத் தம் உறுப்பினர்களுக்கு வழங்கின.

பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தங்களது 95 கிராமக் கடைகள் மூலம் நுகர் பொருட்களை வினியோகித்து பழங்குடியினர் தமக்குத் தேவையான மளிகைப் பொருட்கள், மண்ணெண்ணெய், துணி முதலிய நுகர் பொருட்களை நியாயமான விலைகளிலும், ஒழுங்காகவும் பெற உதவுகின்றன. 1984-85-ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ரூ. 76.48 இலட்சம் அளவிற்கு நுகர்பொருட்களை வினியோகித்துள்ளன.



பழங்குடியினரின் வாழ்க்கையின் தன்மையை மேம்படுத்துவதில் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்றியமையாத பங்குப் பணியாற்றி வருகின்றன. எழில்மிகு மலைத் தொடர்களில் வாழ்ந்து வரும் பழங்குடியினர், ஏழ்மை, அறியாமை ஆகியவற்றிலிருந்து விடுபட்டு, தமது வாழ்க்கைக்கு எழில் கூட்டி, சமுதாயத்தின் உயர்மட்ட தளத்தில் உள்ளோருக்கு இணையாக வாழ, பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வழிகாட்டியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

# ஒவ்வொரு ஏக்கருக்கும், அறுவடை தோறும்
# ரூ.500 முதல் ரூ.1000 வரை அதிக வருமானம் பெறுங்கள்.

கே. வேணுகோபால்
வக்கூர் போஸ்ட்,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு

பல வருஷங்களா நான் வெள்ளாமை பண்ணி வரேன்—நெல்லுப் பயிர். போன வருஷம் பாருங்க, பாரஸ் ஸ்ப்ரே தெளிச்சேனு, அடேயப்பா, ஏக்கருக்கு 275 கிலோ அதிகமாகவே அறுவடை பண்ணினேன். இனிமேலே யாருக்குமே என் சிபாரிசு பாரஸ் தான்.






வாங்குங்கள் இன்றே கிட்டத்தி லுள்ள விவசாய வியாபாரியிடம் கிடைக்கிறது.

## பாரஸ் ஃபோட்டோஸின்த்

நிலத்தில் உங்களுக்கு நிதிவளம் செழிக்கவைப்பது பாரஸ் ஃபோட்டோஸின்த்

உபயோக முறை: ஏக்கர் ஒன்றுக்கு ½ புட்டி பாரஸ், இரு தடவைகள் தெளியுங்கள் இலைகள் சொட்டச் சொட்ட நனையும் வரை.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

HLL-1869

# ஆதிதிராவிடர் செங்கல் தொழில் கூட்டுறவு சங்கம்



இந்தியா கிராமங்களில் வாழ்கிறது'' என்றார் அண்ணல் காந்தியடிகள்! அவரது வாக்குக்கு ஏற்ப கூட்டுறவு முயற்சியால் செழித்திருக்கும் ஒரு கிராமத்தை திருச்சி மாவட்டத்தில் காணலாம்.

வெங்கடாசலபுரம் கிராமம். இது, திருச்சி நகரில் இருந்து 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. காவிரிப் பாய்ச்சலில் செழிக்கும் நெற்கழனிகளைத் தாண்டிப் போனால் மண்ணைக் குவித்து மலையாக்கி மலையைத் தோண்டிச் செங்கல்லாக்கி மக்கள் வாழ இல்லங்கள் சமைத்திட விவசாய நிலங்களூடே அமைந்துள்ளது வெங்கடாஜலபுரம் ஆதிதிராவிட செங்கல் தொழிலாளர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

இந்தக் கூட்டுறவுச் சங்கப் பகுதியில் வாழும் ஏழை ஆதிதிராவிட தொழிலாளர்களுக்கு வயல் வேலையில்லாக் காலங்களில் நல்ல வேலைவாய்ப்பை நல்கி வாழ்க்கைக்கு வளமூட்டும் சேவை புரிந்து வருகின்றது. ஆண்டின் மழைக் காலமான 4 மாதங்கள் தவிர, இதர மாதங்களில் தொழிலாளர்கள் தேனீக்கள் போலப் பணிபுரிந்து வருகிறார்கள்.



இந்தச் செங்கல் தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் மூன்று காளவாய்கள் உள்ளன. பத்து இலட்சம் செங்கற்களை அடுக்கும் அளவுகளைக் கொண்ட அமைப்பாகும் இது! இங்கு தற்போது 3 காளவாய்களில்மட்டுமே செங்கற்கள் சுடப்படுகின்றன!

இங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை கிடைக்கிறது. வசிக்க இடமும் உண்டு! போனஸ் உண்டு! செய்யும் தொழிலுக்கு ஏற்பக் கூலி உண்டு!

இந்தச் செங்கல் தொழில் கூட்டுறவுச் சங்கம் இப்பகுதியில் 25 ஆண்டுகளுக்கு முன், முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டது. தற்போது இப்பகுதியில் சுமார் 10 செங்கல் தொழிற்சாலைகள் தனியாரால் துவக்கப்பட்டு விட்டன. இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது 525 ஏழைஆதிதிராவிடப் பெருமக்கள் உறுப்பினர்களாக உள்ளனர். 24 மணிநேரமும் பணி நடைபெறும்.

இந்தச் செங்கல் தொழில் கூட்டுறவுச் சங்கம் மூலம் கூலித் தொகையாக 1980-'81-ல் ரூபாய் 3.25 இலட்சமும், 1982-'83ல் ரூ. 2 இலட்சமும் 1984-'85-ல் ரூ. 4 இலட்சமும் வினியோகிக்கப்பட்டுள்ளது. 1985-'86ல் 31-5-'85-முடிய உள்ள காலத்தில் மட்டும் ரூ. 1.25 இலட்சம் கூலி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இக் கூட்டுறவுச் சங்கம் தொடர்ந்து இலாபத்தில் செயல்பட்டு வருகிறது.

இந்தச் செங்கல் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஆதிதிராவிடத் தொழிலாளர்களுக்கு மட்டுமின்றி நகரத்தில் வாழும் நடுத்தர மக்களின் வீடுகட்டும் தேவைக்குரிய செங்கல்லை மலிவு விலையில் உற்பத்தி செய்து தருகிறது. 1000 செங்கற்களின் விலை ரூ. 350 ஆகும். ஒரு லாரி செங்கற்கள் ரூ. 1158.75 காசு விலையாகிறது. இதில் 2500 கற்கள் ஒப்புவிக்கப்படுகின்றன.

> கூட்டுறவியக்கம் ஒரு பொருளாதார இயக்கம் மட்டுமல்ல; அறநெறி சார்ந்த இயக்கமும் ஆகும்.
>
> —அண்ணல் காந்தி

இந்தக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 33 ஏக்கர் நிலப்பரப்பு சொந்தமாக உள்ளது. இருப்பினும் அருகில் உள்ள கொள்ளிடம் நதிப்பக்கம் தேங்கும் வண்டல் மண்ணை லாரிகளில் எடுத்து வந்து மலைபோல் குவித்து வைத்துள்ளனர்.

இக் கூட்டுறவுத் தொழிற் சங்கம் அப்பகுதிகளில் ஏழை ஆதிதிராவிடப் பெருமக்களுக்கு வேலைவாய்ப்பை நல்குவதோடு தனியார் துறையினரும் இடைத்தரகரும் கொள்ளை இலாபமடைவதைத் தடுத்து, நியாயமான விலையில் செங்கல் வினியோகித்து வருகிறது.

இத்தொழில் கூட்டுறவுச்சங்கம் மூலமான உற்பத்தி அளவுகளைக் காணும்போது இதன் செயற்பாடுகளை உணரலாம். 1980-81-ல் இதன் விற்பனை ரூ. 7.69 இலட்சம் அளவிலும், 1983-'84 முடிய ரூ. 9 இலட்சமாகவும் 1984-'85-ல் ரூ. 11 இலட்சமாகவும் இருந்துள்ளது.

கூடித்தொழில் புரிவதால் நம்மைப் பிடித்த வறுமைப்பிணி நீங்குகிறது. வளமான எதிர் காலத்துக்கு உத்திரவாதமான தொழில்வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.



சென்னை தலைமைச் செயலகத்தில் இலங்கைத் தமிழர் நல்வாழ்விற்காக 23.9.85 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் முன்னிலையில் அரசு ஊழியர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் நன்றி தெரிவித்து உரை நிகழ்த்திய காட்சி 16.10.85 தமிழரசு இதழை அலங்கரித்தது.




சி. செல்லப்பன், இ.ஆ.ப.,

தொழில் துறை ஆணையர், தொழில் வணிகத்துறை இயக்குநர்

நம் நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளில் முக்கியமானது, வேலையில்லாத் திண்டாட்டம் என்பது அனைவரும் அறிந்ததே. இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டுமெனில் அதிக வேலை வாய்ப்பளிக்கும் சிறு தொழில் நிறுவனங்களைத் தொடங்கிடல் வேண்டும். இவ்வாறு புதிய சிறு தொழிலகங்கள் அமைப்பதுடன் கூட அவற்றிற்குத் தேவைப்படும் இதர உதவிகளையும் அளித்து அவை இலாபகரமாக இயங்கிட ஆவன செய்திடல் அவசியம். தொழில் வணிகத்துறையின் கீழ் இயங்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இவ்விரு குறிக்கோள்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றன. இச்சங்கங்கள் மூலம் 1,43,503 அதிகமானோர் பயனடைந்து வருகின்றனர். இவ்வாறு பயனடைவோர் சமூகத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளனர்.

உதாரணமாகச் சிறு தேயிலை பயிரிடும் விவசாயி முதல் தொழில் நுட்ப வல்லுநர் வரையும், மரவள்ளிக்கிழங்கு பயிரிடுவோரிலிருந்து சவ்வரிசி தயாரிப்பவர் வரையும், செங்கல் தொழிலாளி முதல் செங்கல் தொழிலக முதலாளி வரையும், தீப்பெட்டித் தொழிலாளி முதல் தீப்பெட்டித் தொழிற்சாலை நிறுவனர் வரையும், கயிற்றுப் பொருள் தொழிலாளி முதல் பாலித்தின் பொருள் தயாரிக்கும் ஊழியர் வரையும், தோல் தொழிலாளி முதல் தோல் பதனிடும் தொழிற்சாலை முதலாளி வரையுமாகப் பல்வேறு நிலையிலுள்ளோரை இச் சங்கங்கள் தங்கள் உறுப்பினராக உள்ளடக்கி உள்ளன. இவ்வாறு பல்வேறு சமூக நிலையிலுள்ளோரை உறுப்பினராக உள்ளடக்கியுள்ளதிலிருந்தே இச் சங்கங்களின் புகழ் எளிதில் விளங்கும்.

31.3.85 அன்று 723 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட்டு வந்தன. ஏழு ஆண்டுகட்கு முன்னர் 31.3.78 அன்று 297 சங்கங்களே இருந்தன. 1984-85 ஆண்டில் இச்சங்கங்களின் விற்பனை ரூ. 91.68 கோடியாகும். இது 1977-78ல் விற்பனையான ரூ. 17.67 கோடியைவிட 5 மடங்குகளுக்கும் அதிகமாகும். இவ்வித வியத்தகு முன்னேற்றம் தமிழக அரசின் முற்போக்குக் கொள்கையினால் அடையப்பட்டுள்ளது. இக்கொள்கையால் முன்னர் இருந்த தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்த தொழில்களில் புதிய சங்கங்கள் அமைத்தது மட்டுமின்றிப் புதிய மாதிரியான தொழில்களிலும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரசு இச்சங்கங்களுக்குப் பங்கு மூல தனத்துடன், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மானியங்கள், கடன் வசதிகள் ஆகிய உதவிகளை வழங்கி இச் சங்கங்களின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளது.

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை இரு வகைகளாகப் பிரிக்கலாம். முதல் வகைச் சங்கங்கள் பல்வேறு வகைப் பொருட்களைத் தாமே உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றவை ஆகும். இரண்டாவது பிரிவைச் சேர்ந்த சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்குத் தேவையான சேவைகளைச் செய்து தருகின்றன. முதல் வகைச் சங்கங்களில் இரு உட்பிரிவுகள் உள்ளன. முதல் உட்பிரிவைச்சேர்ந்த சங்கங்களில் அவற்றின் உறுப்பினர்களே தொழிலக வேலையாட்களாகப் பணியாற்றிப் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர்.

செங்கல் தொழிலாளர் சங்கங்கள், கயிறு தயாரிப்புச் சங்கங்கள், பாத்திரத் தயாரிப்புச் சங்கங்கள், பாலித்தின் பொருள்கள் தயாரிக்கும் சங்கங்கள் ஆகியவை இவ்வகையில் அடங்கும். இரண்டாவது உட்பிரிவைச் சார்ந்த சங்கங்களில், அவற்றின் உறுப்பினர்கள் சங்கத்திற்குத் தேவையான மூலப் பொருளை அளிக்கும் விவசாயிகள் ஆவர். தேயிலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இப்பிரிவில் அடங்கும்.

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் பெரும் வெற்றிக்கான முக்கியக் காரணம் அவை, அவற்றின் உறுப்பினர்கள் இடைத்தரகர்கள் முதலியோரால் சுரண்டப்படுவதை ஒழித்துக் கட்டியது ஆகும். உதாரணமாகத் தேயிலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தபின் தேயிலை விவசாயிகள் அவர்கள் நிலங்களில் பயிராகும் பச்சைத் தேயிலைக்கு நல்ல விலை பெறுகின்றனர். அதற்கு முன்னர் தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள் இவர்களுக்கு மிகக் குறைந்த விலை அளித்தது மட்டுமின்றி, எடையில் ஏய்ப்பு முதலியன செய்து வந்தன. சென்ற ஆண்டில் தேயிலை விவசாயிகள் ஒரு கிலோ பச்சைத் தேயிலைக்கு ரூ. 5.08 வீதம் பெற்றுள்ளனர். இதுவே இச்சங்கங்கள் ஆற்றியுள்ள நற்பணிக்குச் சான்றாகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



வளமுடன் தொழில் பல சிறப்பதற்கே
வகுத்த நின் பாதையினில் தொடர்ந்து வந்து
திறமுடன் தமிழகத்தில் ஆட்சி செய்யும்
முதல்வர் எம்ஜிஆர் உருவினிலே
அண்ணா உன்னை நாங்கள் பார்க்கின்றோம்
அன்பின் எல்லையிலா மன்னவனைக்
காண்கின்றோம்.



## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஆற்றிடும் சாதனைகள்

- பெரிய மற்றும் நடுத்தர தொழில்களை பொதுத் துறையிலும் கூட்டுத்துறையிலும் அனேகமாக பின் தங்கிய பகுதிகளில் நிறுவுதல்.
- கூட்டுத்துறை நிறுவனங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்தல்.
- கூட்டுத்துறையில் நடுத்தர மற்றும் பெரிய தொழில் திட்டங்களுக்கு தொழில் நுட்பம் மற்றும் அடிப்படை தேவைகளைப் பெற உதவி செய்தல்.
- மாநில மற்றும் மத்திய அரசு, நிதி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தொழில் உரிமம், இறக்குமதி உரிமம், தொழில் சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் கடனுதவி பெற உதவி செய்தல்.
- ரூ. 600 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்பட்ட 41 திட்டங்களில் 15,520 பேருக்கு வேலை வாய்ப்பு.
- மேலும் ரூ. 400 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்பட்ட 10 திட்டங்களில் 12,000 பேருக்கு வேலை வாய்ப்பு.

ஈ. வெ. கி. சுலோசனா சம்பத்
தலைவர்

டிட்கோ

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

(தமிழக அரசு நிறுவனம்)

**735, அண்ணா சாலை,**
**சென்னை-600 002**




அளவோடு பெற்று
வளமோடு வாழுங்கள்

DIPR/85


சிறப்பும், வசீகரமும்
நிறைந்தவை கோ-ஆப்டெக்ஸ்
நீலம், இளஞ்சிவப்பு,
பச்சை, கபிலம் போன்ற
கண்கவர் நிறங்களிலும்,
பட்டு, பருத்தி, பாலி
யெஸ்டர், சிஃபான்
போன்ற பல ரகங்
களிலும் அற்புத
மான சேலைகளை
கோ-ஆப்டெக்ஸ்
உங்களுக்காகத்
தயாரிக்கிறது.
கோ-ஆப்டெக்ஸ்
ஷோரூம்களில்,
50,000 புதிய டிசைன்
களில், உங்களுக்குப்
பிடித்தமானதை வாங்
குங்கள்
புதிய ரக வண்ணத்துணி
வகைகளுக்கு
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
Efficient/DIPR.